227

சம்பூர்ண மஹாபாரத சரித்திரமும் தயாராகி வரு



11 OCT
O-,892MMT1k
N27
85915

அலிபாதுஷா சரித்திரம்

(டிராமா) இரண்டுபாகமும் விலை அணா—8.

நண்பர்காள், இந்த அலிபாதுஷா சரித்திரம் இதுவரையில் நாடக ரூபமாய் இல்லாததினால் அநேகரின் வேண்டுதலால் சென்னை இந்து விநோத சபா சீனிவாச பிள்ளை கம்பெனியிலும், ஆலந்தூர் ஒரிஜனல் கம்பெனியிலும், நடத்திவருவதை அச்சிட்டிருக்கிறோம், இதில் ஆங்காங்கு தர்க்க காயனங்களும், வசனங்களும் சுலபமாய் பாடுவதற்கும், நாடகம் கற்றுக்கொள்வதற்கும் அனுகூலமாயிருக்கும்படி அச்சிட்டிருக்கிறது.

முதல்பாகம் விலை அணா—4 இரண்டாம்பாகம் விலை அணா—4

சித்திரசேனே பாக்கியான மென்னும் 'காலவரிஷி'

சரித்திரம் டிராமா விலை அணா 0 4 0

இதில் கந்தர்வனை காப்பாற்ற அர்ஜுனன் பிரதிக்ஞை செய்வதும், கந்தர்வனை கொல்ல பிரதிக்ஞை செய்திருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் தர்க்கங்களும், ஸ்ரீகிருஷ்ணார்ஜுனர்களின் சப்த போராட்டமும், காலவரிஷியின் கோபாக்னியும் மிக ஆச்சரியத்தை விளைவிக்கும், இதே சரித்திரத்தை தெலுங்கில் "கய" சரித்திரமென்று சொல்லுவார்.

அலிபாபா என்னும்

40-திருடர்களின் சரித்திரம் விலை அணா—4

இது பார்ஸி கம்பெனிகளில் நடத்தியதை தமிழில் இயற்றி நமது தமிழ் நாடக கம்பெனிகளில் நடத்தி சகலஜனங்களால் மதிக்கப்பெற்றது. இதில் சகோதரர்களின் பொறாமையும் தர்க்கபாட்டுகள், சிங்காரம், வீரம், சோகம், கருணை முதலிய பாகங்கள் மிக திருப்திகாரமாயிருக்கும்.

அலாவுதீன் அல்லது அற்புததீபம்.

டிராமா விலை அணா—3

இது பொம்பாய் பார்ஸி கம்பெனிகளிலும், ஆலந்தூர் ஒரிஜினல் கம்பெனியிலும், மதுரை பாய்ஸ் கம்பெனியிலும், ஸ்ரீ. கன்னையா கம்பெனியிலும் நடத்திக்காட்டியதை யாவரும் கண்டிருக்கலாம், இதை மற்றொருவர் கற்றுக்கொள்ளவும் படிக்கவும் இதுவரையில் அச்சிலில்லாத குறையை நீக்க தற்சமயம் அச்சிட்டு வெளியிட்டனம்.

இங்கிலீஷ் கற்பிக்கும் ஆங்கில ஆசான்

60-நாளைக்குள் இங்கிலீஷ் பேசவும் படிக்கவும் எழுதவும் கற்றுக்கொள்வீர்கள். தமிழ் தெரிந்தவர்களுக்கு உபாத்தியாயர் வேண்டியதில்லை 20000 ஜனங்களால் படித்து பிரக்கியாதி யடைந்தது. விலை ரூபா 2 0 0

சரீர மர்ம சாஸ்திரம்.

பிரியமதாகவே சரீர மர்மத்தை தெரிந்து கொள்ளுங்கள் விலை ரூபா—1.

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும் ஆண், பெண் சிசு உற்பத்தி விபரமும் ஆங்கிலில் எழுதிய இல்லும் சித்திரங்களும் அழகிய 61-சித்திரப் படங்களுடன் உள்ளது, ஒவ்வொரு குடும்பத்திலிருக்கவேண்டியது.

எமது விலாசம்:— T. ஸ்ரீனிவாச அண்டு கோ.,
நெ. 20 கம்மாள்வார் தெருவு முதல்சந்து சென்னை.

ஸ்ரீராமஜெயம்.

T. நாராயணசாமி பிள்ளை கம்பெனியிலும், C. கன்னையா கம்பெனியிலும், K. சீனிவாச பிள்ளை கம்பெனியிலும், இன்னும் பல கம்பெனியிலும் நடத்தி பல்லாயிர ஜனங்களால் நன்கு மதிக்கப்பெற்றதும், துஷ்ட புத்தியினால் வரும் தீமைகளை தெட்டென விளக்கிக் காட்டக் கூடியதுமான.

காளிதாஸ் சரித்திரம்

(டிராமா.)

இதை டி. நாராயணசாமி பிள்ளை கம்பெனியின் பிரதான ஆக்டர்களில் ஒருவராகிய, P. R. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களால் எழுதி தரப்பட்டு.

சென்னை,
"மூராஹரி" அச்சுக்கூடத்தில் அச்சிட்டு பிரசுரம் செய்தது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை) 1927 (அணா—4

உ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் யாவருக்கும் தெரிவிப்பது யாதெனில்,—காளிதாஸ் சரித்திரம் என்னும் டிராமா புத்தகத்தை T. நாராயணசாமி பிள்ளை கம்பெனியின் பிரதான ஆக்டர்களில் ஒருவராகிய, P R. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களால் எழுதித்தரப்பட்டு அச்சிலிட்டு வெளியிட்டனம். ஆகையால் இதனடியிற் கையொப்பமிட்ட என் அனுமதியின்றி வேறு யாராவது அச்சிடவும், வேறு விதமாய்ப் பாட்டுகள், வசனம், விருத்தம் முதலானவைகளை மாற்றியாவது அச்சிடா திருக்கும்படி கனம் கவர்ன்மெண்டாரின் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி மீறி அச்சிடுவோரிடம் நஷ்டத்தை சட்டப்படி வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

T. செங்கல்வராய நாயுடு,

மநோஹரி அச்சுக்கூடத் தலைவர்.

நெம்பர், 20, கம்மாளர் தெருவு, சென்னை.

3 3

உ

ஸ்ரீராம ஜெயம்.

காளிதாஸ் சரித்திரம்.

1-வது ஸீன். 1-வது அங்கம்.

அரசன் தர்பார்.

போற்றி விருத்தம்.

சந்த்ரசேகரனேபோற்றி சதாசிவப்பொருளேபோற்றி
சுந்தரானந்தாபோற்றி சுருதிகள்முடிவேபோற்றி
எந்நாடுகள்செழிக்க எனக்கருள்கூர்ந்தாய்போற்றி
எந்தையேயெனதுசெங்கோல் எழில்பெறஅருள்வாய்போற்றி.

வசனம்

ஈசனே! ஜெகதீசனே! நின்னடிக்கே தஞ்சம்.

மந்திரிகாள்! ஜெகதீசனுடைய கிருபா கடாக்ஷ வீக்ஷண்ய நோக்கத்தினாலும், உங்களுடைய உதவியினாலும் நான் ராஜ்ஜியத்தை தளரா விடாமல் ஒராங்கணியாய் அரசு செலுத்திவருகிறேன், ஆயினும் தினந்தோறும் உலக அனுபவ விஷயத்தைக் கண்டறிய வேண்டியவனாக இருப்பதால் இச்சமயம் உங்களை விசாரிக்க விரும்புகிறேன், ஆகையால் தக்க பதில் அளிப்பீர்களாக.

முதல் - மந்திரி, வசனம்.

தேவ பிரபு! தாங்கள் கேட்கவும் நாங்கள் பதிலளிக்கவும் காத்துக் கொண்டிருக்கிறோம்,

அரசன் - தரு.

என்னடி எம்பினை இங்கு என்ற வர்ணமெட்டு.

ஆலயப்பூஜைகள் அனுதினம்குறைவின்றி
அன்புடன் நடக்கிறதா பெண்மந்திரி ஆ

காளிதாஸ் சரித்திரம்.

அரசன் - வசனம்.

மந்திரிகாள்! நமது ராஜ்ஜியத்திலுள்ள சிவாலயம், விஷ்ணுவாலயம், பிரம்மாலயம் என்று சொல்லக்கூடிய இத்தியாதி ஆலயங்களில் ஷட்கால பூஜைகள் நடந்தேறி வருகிறதா?

மந்திரி - வசனம்.

மகாராஜா! நமது நாட்டிலுள்ள ஆலயங்களில் மூன்றுகால பூஜைகள் நடக்கிறதுடன் தவிர, தபோர்ச்சவம், வசந்த வுற்சவம், மாதவுற்சவம், வருட வுற்சவம், ரதோர்ச்சவம், இத்தியாதி உர்சவங்கள் யாதொரு குறைவின்றி நடந்துக்கொண்டேவருகிறது.

அரசன் - தரு.

மாதமும்மாரிபெய்து — மன்னிருடன் குடிகளும்
மானிலத்தினிலன்பாய் — வாழ்கின்றார்களா மா

அரசன் - வசனம்

மந்திரி! நமது நாட்டில் மாதமும்மாரிபெய்து அதனால் குடிகள் இடும்படியான பயிர்கள் ஓங்கி வளர்ந்து அறுவடைசெய்து அதனுக் அவர்கள் லாபமடைந்து நமக்கு ஆறிலொரு கடமையை செலுத்தி வருகின்றார்களா?

மந்திரி - வசனம்.

மகாராஜா! நமது நாட்டில் கற்புடைய மங்கையர்க்கோர் மழை, நீதி மன்னர் நெறியனுக்கோர் மழை, வேதமோதிடும் வேதியர்க்கோர் மழை, என்னும் மாதமும்மாரிபெய்து குடிகளிடும்படியான நஞ்சை, புஞ்சை நவதானியங்களும், செழிப்பாய் வளர்ந்து, அதனால் நமக்கு ஆறிலொரு கடமையை செலுத்திக்கொண்டு வருகிறார்கள். ஆன்றோர் சொல்லியபடி வரப்புயர என்ற பழமொழிப்படி வரப்புயர்ந்தால் நீர் உயரும், நீர் உயர்ந்தால் நிலம் உயரும் நிலம் உயர்ந்தால் நெல் உயரும், அதைப்போலவே இந்நகரில் நடந்துவருகிறது, இதில் ஒன்றும் குறைவில்லை.

அரசன் - தரு.

சித்தரச் சப்பரக்கட்டி — செலுத்திவருகின்றார்
சிறுவருகினிக்கு — தெவ்வர நிருமைப்பீச மி

அரசன் - வசனம்.

நமது ஆக்ஞைக்கு அடங்கிய சிற்றரசர்கள் நமக்கு சேரவேண்டிய பகுதிப்பொருளை வருடம் தவறாமல் கட்டிக்கொண்டு வருகின்றார்களா?

மந்திரி - வசனம்.

பிரபு! நமது செங்கோலுக்கு கட்டுப்பட்ட அரசர்கள் வருடந்தோறும் நமக்கு சேரவேண்டிய திறைபொருளை தடையில்லாமல் செலுத்திவருகின்றனர், அப்படி தவறும்பக்ஷத்தில் நமது ஏவலாளர்களை அனுப்பி வசூல்செய்து கொண்டுவந்து பொக்கிஷ அதிகாரிகளிடம் ஒப்பித்துவிடுகிறோம், அதிலும் தடையொன்றும் கிடையாது.

அரசன் - தரு.

அன்னதான சத்திரத்தில் அனுதினம் குறைவின்றி
அமுதளித்து வாரூரா அன்புடனுரை செய்வீர் அ

அரசன் - வசனம்.

மந்திரி! நமது ராஜ்யத்தில் வரப்பட்ட தேசபாந்திர பிராமணர்களுக்கும் மற்ற யாசகர்களுக்கும் அன்னதான சத்திரத்தில் அவரவர்கள் போதும் போதும் என்று சொல்லும்படி பரிமாறிக்கொண்டு வருகின்றார்களா?

மந்திரி - வசனம்.

மகாராஜா! நமது ஆளுகையில் மயிலுக்கோர் தண்ணீர்பந்தலும் ஐந்துமயிலுக்கோர் அன்னதானமடமும் ஏற்படுத்தி வரப்பட்ட யாசகர்களுக்கு வேண்டியவாறு அமுதளித்து வருகின்றார்கள், இது விஷயத்தில் குறைவென்பதே கிடையாது.

அரசன் - வசனம்.

எரியும் விளக்கானாலும் தூண்டுகோலொன்று வேண்டும், அதைப்போல் நான் எவ்வளவு தயவோடும் மனுநீதி தவறாமல் அரசாட்சி புரிந்தாலும், வரும் பொருளை காத்தல் மந்திரிக்கழகு என்பதுபோல் நீங்களனைவரு மருகிலிருந்து பின்னால் விளையப்போகிறதை முன்னடியே பரிந்து தெரிவிக்கக்கூடிய உமது உதவியால் நான் அரசுபுரிந்தும் ஓர் மனக்குறை ஒன்று என்னை வாதிக்கின்றது.

மந்திரி - வசனம்.

ராஜா! தமக்கு எந்தவித கஷ்டமாயிருந்தாலும் எங்களிடத்தில் தெரிவிக்காமலிருந்தால் மனக்குறை எப்படி நீங்கும், எம்மிட மதை தெரிவித்தால் அதற்கு தகுந்த சூட்சிகள் செய்வோம்.

அரசன் - தரு.

எல்லாசுகபோகங்களும் எனக்கிருந்தாலும்
அல்லலொன்றிருவெனக்கு ஆயாசம்பாரும் எ
சொல்லவென்றால் நாவெழாது சோருதே ஆவி
நல்லகாலமென்றோவென நலிகின்றேன் மேவி எ
என்தவத்தினாலுதித்த என்மகளுக்கு
இன்னமணம் செய்யாதாலே ஏக்கமே எனக்கு எ

அரசன் - வசனம்.

மந்திரி! எனது அருந்தவப் புத்திரியாகிய சிங்கார மஞ்சரிக்கு விவாகத்தை செய்வித்து அந்த மணமகனுக்கே இந்த ராஜ்யத்தை முடி சூட்டி கண்குளிரபார்க்க விருந்த எனது எண்ணம் முடிவாகவில்லையே என்ற ஏக்கம் அதிகரித்திருக்கின்றது இதற்கு என்ன செய்யலாம்.

மந்திரி - வசனம்.

அரசரே! இதற்காக நீர் ஏன் கவலைப்படுகின்றீர், அஞ்சாதீர்! அரண்மனையில் 55-அரசர்களுடைய ஓவியங்கள் இருக்கின்றன, அப் படங்களை தோழியின் மூலமாய் அந்தப்புரம் அனுப்பி தமது புத்தி ரியை பார்க்கச்செய்து படத்திலுள்ள புருஷர்களில் எந்த புருடனைக் கண்டு ஆசைப்படுகிறார்களோ அதை நாமறிந்து அந்த அரசனுக்கு தமது புத்திரியை விவாகம் செய்து கண்குளிரப்பார்க்கலாம், இதற்காக வேறு யோசனை யேன்?

அரசன் - வசனம்

ஆனால் அதனை அனுப்பி அந்தப்புரத்திலுள்ள சேடியை வர வழைப்பாய்.

மந்திரி - வசனம்.

அப்படியே வரவழைத்து படத்தையும் அனுப்புகிறேன்.

தோழி - வசனம்.

மகாராஜா! என்னை அழைப்பித்த காரணம் யாது.

மந்திரி - வசனம்.

தோழி! இந்த ஐம்பத்தைந்து அரசகுமாரர்களுடைய ஓவியங்களை உன்னுடைய அரசிக்கு காண்பித்து எந்த மன்னவன்மீது ஆசைப்படு கிறாளோ அதை அறிந்து எம்மிடம் வந்து நீ உரைசெய்யவேண்டும் சீக்கிரம் செல்.

2-வது ஸீன்.

கன்னிகாமாடம். காலம்—பகல்.

சிங்கார மஞ்சரி - தரு.

தாளம் - ரூபகம், ராகம் - கீர்வாணி.

அம்பாபார்வதி நின்னுனை	வதிநின்னுனே	
சோகம்பிதி சுகவாணிப்ரோவ	பராமாயிகருணி	அ
கீர்வாணிவந்திதபதசா	ரசசம்சங்கீதலோலா	
சுகுணக்கியான	ஜாலமேமல காமாக்ஷி	அ
இந்துவதனகுந்தரதன	சிந்தூரகமனுமக	
ரக்தவாணி	நீலவேணி கீர்வாணி	அ
ராமகிருஷ்ணசோதரி	சிவசங்கரி கௌரிகுண	
காமகாமபீடவாசினி	சாம்பவிஸ்ரீ காமாக்ஷி	அ

சிங்காரிமஞ்சரி - வசனம்.

என்னருமைச்சேடிகாள்! நமது அம்பிகையின் அருளால் நாமனைவரும் சுகமாகவாழ்ந்து வருகின்றோம், ஆயினும் என் தந்தையார் என்னைக்குறித்து ஏதேனும் பேசுகின்றாரா? அது விஷயம் உங்களுக்கு ஏதேனும் தெரியுமா? நமது முக்கிய தோழியாகிய வனஜாக்ஷியெங்கே போயிருக்கிறாள்?

தோழி கனகமாலை - வசனம்.

எங்கள்தேவியாரே! வனஜாக்ஷியை தமது தந்தையார் சபைக்கு வரும்படி ஆள்வந்தது, அதனால் சபைக்கு போயிருப்பாள், வந்துவிடுவாளம்மா? அவளும் வந்துவிட்டாள்.

சிங்காரமஞ்சரி - வசனம்.

தோழி! சபையில் என்னவிஷயமாக உன்னை அழைப்பித்தார், சீக்கிரம் சொல்லடி.

தோழி - வசனம்.

இந்த 56-தேச அரச குமாரர்களுடைய ஓவியங்களை உமக்கு காண்பித்து தமக்கு எந்த கணவன்மீது ஆசையிருக்கிறதோ அதை அறிவிக்கும்படி ஆக்ஞாபித்தாரம்மா?

சிங்காரிமஞ்சரி - வசனம்.

ஆனால் தோழிகாள்! இந்த படத்திலுள்ள மன்னர்களின் பேரும், பெருமையும், சீரும், சிறப்பும், செல்வமும், குலமும், குணமும், அரசும், பதியும் எல்லாம் விசதமாய் உரைசெய்வீர்.

தோழிகள் - தரு.

தாளம் ஆதி - ராகம் - உசேனி.

பல்லவி.

சீதமதிவதனை சிங்காரமஞ்சரி செப்புவேன் கேளம்மா
மன்னர்பெருமை செப்புவேன் கேளம்மா சீ

அநுபல்லவி.

ஆதித்தன்குலத்துள்ள அவனியில் காம்போஜன்
அரிவையிதோவெற்றியில் அங்கதேசாதிபன் சீ

சரணம்.

பரமனடிமறவா பாஞ்சாலராஜனிவன்
பன்னுமகதராஜன் பாரதிபுகழ்போஜன்
கரசொரூபசோதியன் கர்னாட்டராஜனிவர்
கன்னிகையர்மையல்கொள்ளும் காஷ்மீரராஜனிவர் சீ

மாளவராஜனிவர் மங்கையே கைமுராசர்
மருவிலா சாமராஜன் மாதவர்த்தோர்சிரஞ்சும்
சாளுவ பூபனிவர் சந்த்ர குலதிலகன்
தரணிமீதினில் வெகு சமர்த்தனென விதர்ப்பன் சீ

வசனம்.

அம்மா! இவர் காம்போஜ மகாராஜன், பேர் எப்படியோ அப்படியே அந்த காம்போதிராகத்தை வெகுதிவ்யமாய் பாடி அன்பர்களை மகிழ்விக்கச்செய்வார், இந்த பாஞ்சால மகாராஜன் பரமனடிதொழுது பக்தர்களை காத்து வருபவர், இந்த மகதராஜன் வீரத்தில் சிறந்தவர் எதிரிகளை பாருமதிக்கும்படி யுக்தியாய் அமர்செய்து அரசை நிலைநாட்டினவர். இவர் போஜமகாராஜன், இவருக்கு எப்பொழுதும் கல்விமான்களுடைய பழக்கமே அதிகம், இவர் சபையில் சதா கல்விச்சங்கமாகவே யிருக்கும், அடைக்கலமென்றவரை ஆதரிக்கக்கூடிய மேன்மையையுடையவர் அன்பருக்கு அன்பர், அடிதொழும் சீலர், இந்த கர்னாட்டக மகாராஜன் தேசச்சிறப்பும் வயல் வளமும் பெற்றவர், ஆனால் கல்வியில் சற்று குறைவுபட்டவர். இந்த காஷ்மீர அரசர் வெகு

சௌக்கியமுள்ளவர், ஆனால் சிற்சில சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றுணர்ந்தவர், வானசாஸ்திரங்களையும் அநேக ஆகம விதி புராணங்களையும் கற்று தேர்ச்சியடைந்தவர். இம்மைசூர் மகாராஜன் தெய்வபக்தியில் சிறந்தவர், அந்தணர்களை ஆதரிக்கும் தயாநிதி, பொன் நகரம் பெற்றவர், சுய அரசாக்ஷி பெற்றவர், மாதவரை வந்திக்கும் மகுடர், இந்த சந்திரகுல திலகர் பாண்டவர்களின் பரம்பரையைச்சேர்ந்தவர், சந்த்ராயுதத்தை பெற்றவர், அமரில் அபயமென்றால் ஆதரிக்கும் நிலைமை வகித்தவர், இந்த விதர்ப்பராஜன் சகல கலா சம்பன்னர், மணிமுடிமன்னர், மகா சமர்த்தர், அதிவினயவாக்சாதுர்யமுள்ளவர், மற்ற அரசர்களைவிட சிறந்தவர், ஆயினும் ஸ்ரீலேலன் மற்ற அரசர்களும் பெருமையுடைந்தவரே?

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடி பயித்தியக்காரிகளா! நீங்கள் எனக்கு அரசர் ஓவியத்தைக் காண்பித்து அவ்வவ் வரசர்களின் பேரும் பெருமையும் எல்லாம் சவிஸ்தாரமாய்ச் சொல்லிவந்தீர்கள், நானும் ஒவ்வொன்றையும் கவனித்தேன், இதில் எனக்கு சம்மதியாகவும், மீசுரமாகவும் வாசித்தவர்கள் ஒருவரேனும் காணவில்லை.

தோழி - வசனம்.

அம்மா! இந்த படத்தைக்கண்டவுடன் இந்த அரசர்கள் தமக்கு சிறுக வாசிக்கவில்லையென்று தாம் எப்படி அறிந்துக்கொண்டீர்.

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடி பேதாய்! "அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதுபோல் இவர்களின் முகத்தை நோக்கும்போதே நன்றாய் தெரிகிறது, எவ்வளவு சம்பத்து இருந்தபோதிலும் என்னடி பெருமையிருக்கிறது, சகடக்கால்போல வரும் செல்வத்தில் பித்தேறி உலகம்சிரிக்க செத்தேபோனார் எத்தனையோபேர் அத்தனை பேரையும் கண்டும் கேட்டும் இருக்கின்றேன், செல்வமானது ஓரிடம் தங்காது, சென்றுக்கொண்டேயிருக்கும், நீர்க்குமிழியைப்போல் தோன்றி மறையக்கூடியது, இந்தப் பொருள்களினால் என்னடி சௌக்கியம்; அழியாத கல்விப் பொருளிருந்தால் கடைசிகாலம்வரை அழியாது, அப்படிப்பட்ட பொருளை விரும்பவேண்டும் அதைவிட்டு செல்வச் செருக்கடைந்து இருமாந்திருக்கும் மன்னர்களை பார்த்து நான் ஆசைப்பட்டு விவாகம் செய்துக் கொள்ளவேணுனால் நான் இக்காலம் வாசித்துவந்த பொருளுக்கு என்னடி பெருமையிருக்கிறது, ஆகையினால் எனக்கு மீசுரமாகவும் அவ்

லது சமதியாகவும் வாசித்த மன்னவனைத்தான் நான் மணர்வேன், அதிலும் நான் கேழ்க்கும் கேள்விகளுக்கு தகுந்த பதிலுரைக்கும் பூமானைத்தான் நான் விவாகம் செய்துகொண்டு வாழ்வேனே தவிர, இல்லையானால் இந்த ஜன்மத்தை இப்படியே யொழித்திடுவேன்.

தோழி - வசனம்.

அம்மா! இப்படி சொல்லிவிட்டால் தமது தந்தையிடம் என்னவென்று சொல்லுகிறது.

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடி சகிகாள்! நீங்கள் ஏன் கவலைப்படுகின்றீர், நானே தந்தையின் சபைக்கு வருகிறேன், என் கருத்தையும் சொல்லுகிறேன், நீங்கள் பயப்படவேண்டாம், வாருங்கள் போகலாம்.

3-வது சீன்.

ரோட்டு. தனி சீன்.

சிங்காரமஞ்சரி - தரு.

எந்தருநீதயா (என்ற வர்ணமெட்டு.)

சுந்தரி அந்தரி — துயர்தீர்த்தாதரி
இந்திராதியோர் — பணிந்தேத்றும் ராஜேஸ்வரி
சங்கரி சோதரி — சர்வதயாபரி
அங்கஜனைப்பயின்ற — அற்புத ஓங்காரி
சிந்தோதயாபுத்ரீ — ஸ்ரீ அரிபாரி
செந்தாமரையாசனி — தேவிமனோகரி

4-வது சீன்

அரசன் - தர்பார்.

குறிப்பு:— அரசன் தர்பாரில் மந்திரிமார்கள் முதலானவர் இருக்க, சிங்காரமஞ்சரி சென்று.

சிங்காரமஞ்சரி - வசனம்.

பிதா! தமது அருமை புத்திரி சிங்காரமஞ்சரி வந்தனம் செய்கின்றேன்.

அரசன் - வசனம்.

கண்மணி! யென் குழந்தாய்! வா யென்னருகில், உட்காரு, யாது காரணம் எது? சபையை நாடிவந்தது, என்ன விஷயம், சேடிகள் கொண்டுவந்த ஓவியங்களை எல்லாம் பார்த்தனையா; உனக்கு எந்த புருடன்மீது இச்சை, அதை தெரிவித்தால் அந்தப்படியே செய்து முடித்து நானும் கண்குளிரப் பார்க்கின்றேன், சொல்லம்மா! என்னிடம் சொல்ல நாணப்படாதே.

சிங்காரமஞ்சரி - விருத்தம்.

தந்தையேபலமன்ன ரோவியத்தைக் கண்டேனும தருளினாலே
அந்தமிலா அரசர்தம் சீரும்சிறப்பும் என்னருமை சேடிகள்
விந்தையாம் மனவயெலாம் மீதொருவிநோதமன்று
என்தனைப்போல் கலைகற்றோரை வதுவைசெய்ய யேற்றுவேனே.

சிங்காரமஞ்சரி - வசனம்.

பிதா! இப்படத்திலுள்ள அரச புத்திரர்களின் செய்கைகளையும் அவர்கள் சிறப்பும் பெருமையும் எல்லாம் சவிஸ்தாரமாய் தோழிகள் தெரிவித்தார்கள், ஆனால் இந்த புருடர்கள் வாசிப்புத்தன்மையாய் சிறந்தவர்களாக ஒருவரேனும் காணப்படவில்லை. ஆகையால் எனக்கு மீசரமாகவோ அல்லது சமதியாகவோ வாசித்திருந்தால் அவர்கள் நான் கேட்கும் கேள்விகளுக்கும் பதில் தெரிவித்தால் அந்த பூமானை நான் வதுவை செய்துகொள்ளுவேன்; இதுவே என் கருத்து, நான் தமது வார்த்தையை மறுத்து தெரிவித்தேனென்று என்மீது வருத்தப்படாதிருக்க மிகவும் பணிவாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன்.

தனி ரோட்டு.

சிங்காரமஞ்சரி - தரு.

ராகம் கல்யாணி தாளம் ரூபகம்

தேவிமீனாக்ஷிமுதம் தெவரிமேசந்ததம்அம் தே

பாவனமதுராநிலயே பாண்டியராஜதனயே
பாவாரகதாளாநித பரிதோஷித க்ருதயீஸ்வா
பாலகவலப்ரதாயக பக்திமோகசம்தாயக
சேவகபாபவிமோசனி ஸ்ரீகதம்பவனவாசனி தே

இமகாணிபவதனி / விமலகுந்ததருணி
ரமணீயமணிசதனி / ராகஷசவதனி
கம்சரஜனகச்சோதரி / சுந்தரேசகுருதயீஸ்வரி
சமராவிஜிதனிகிலாமரி / சாதுவசங்கரிசங்கரி
கமலஜாதி சுபாலினி / கனதாசுபகுணஜாலினி
சபகானே சுபகாமினி / சங்கீத சாஹ்ஸாதினி தே

5-வது சீன்.

அரசன் - தரு.

அன்னையே உனையல்லாது (என்ற வர்ணமெட்டு.)

எந்தன்கர்மமோயிது / ஏதினிநான்செய்வது
ஒன்றும்தோணேனிப்போது / வுலகில்வாடலானது எ

வந்ததோர் படங்களில் / ஒன்றும்வுதவாது
விந்தையாகதோணுது / வினைமுமேமீருது எ

அன்னைலே இதர்க்கிப்போது / அபலனென்றலாகாது
வுன்னிருபாதமல்லாது / வுற்றதுணையாவது எ

சங்கரா சதாசிவ / சாம்பவி மகாதேவா
பொங்கரவணிந்தவா / போற்றினேனுண்டவா எ

வசனம்.

ஆ தெய்வமே! என் மகளுக்கு விவாகத்தை செய்து கண்குளிர பார்க்கவிருந்த என் எண்ணம் வீணாய்போய்விட்டதே; இனி என்செய்வேனே, என் புத்திரியோ அதிக புத்திசாலி, நன்றாய் வாசித்தவள், இவளுக்குத் தகுந்த கணவன் எங்கு கிடைக்கப்போகின்றான்.

மந்திரி - வசனம்.

மகாராஜா! நீரேன் வருந்துகிறீர், அவனன்றி ஓர் அணுவும் அசையாது, அன்றெழுதினவன் அழித்து எழுதப்போகிறதில்லை, ஆனால் பெண்ணாகப்பிறந்தால் அந்த பெண்ணுக்கென்றே புருடன் முன்பே ஜனித்திருப்பான், நீர் கவலையை விட்டொழியுங்கள்.

1-வது சீன். 2-வது அங்கம்.

சிங்காரமஞ்சரியின்- அந்தப்புரம்.

குறிப்பு:— மந்திரிமகனாகிய சூடாமணி தன்னை விவாகம் செய்துகொள்ள சிங்கார மஞ்சரியின் அந்தப்புரம் வருதல்.

சூடாமணி - வசனம்.

அய்யா காவலரே! உம்முடைய ராஜகுமாரியிடம் சென்று மந்திரி மகனாகிய சூடாமணி யென்பவர் உம்மைக்காண வந்திருக்கிறார் என்று சொல்லி உத்தரவு பெற்றுக்கொண்டுவா? உனக்கு நல்ல சன்மானம் அளிக்கிறேன்.

காவலன் - வசனம்.

அம்மா! தோழி, உங்களுடைய அரசியிடம் சென்று மந்திரிமகன் சூடாமணி வந்து வெளியில் காத்திருக்கிறார் என்று சொல்லி சமூகம் எப்படி இருக்கிறதென்று வருவாய்.

தோழி - வசனம்.

அம்மா! உம்முடைய பால்ய சினேகிதராம், சிறுவயதில் இருவரும் வாசித்திருந்தவராம், மந்திரியின் மகனாம், அவர் பெயர் சூடாமணியாம், உம்மைக்காண வெளியில் காத்திருக்கிறாராம், உத்திரவு எப்படியம்மா.

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடி! பெண் தோழி, சேமிருந்தால் இப்படியல்லவாயிருக்கவேண்டும், கூடிப்பிரிவேல் என்ற வாக்கியத்தை நன்றாய் கற்றுணர்ந்தவனல்லவா! ஆகையால் இளமையில் வாசித்த காந்தன் இப்போது நான் தனிமாடத்தில் இருப்பதைப்பார்க்க அதிக ஆவல்கொண்டு வந்திருக்கிறான்; ஆகையால் தடை செய்யாமல் உள்ளே வரச் சொல்லுங்கள்.

தோழி - வசனம்.

அம்மா! தங்களுடைய பால்ய சினேகிதனாகவும் பள்ளியில் இருவரும் வாசித்தவர்களாகவும் இருந்த இடத்திற்கு இப்போது வருவது கூடாது, அதாவது தாமோ இப்போது எவ்வளவு பருவமடைந்திருக்கின்றீர் இந்த சமயம் ஆடவர் இங்கே வரக்கூடாது; தாமும் ஆடவரிடம் பேசவும் கூடாது, ஆகையால் இங்கே வரச்செய்வது கூடாது தகப்பனாருக்கு இச்செய்தி தெரிந்தால் எங்களுக்கு விபத்துகள் நேரும் ஆகையால் இங்கே வரச்செய்யாதீர்.

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடி! பயித்தியக்காரி சூடாமணியை என்னவென்று மதித்தனை அவன் யார் என் மித்திரன் என் சோதரன் அவனிங்குவந்தால் தந்தை யாரும் யொன்றும் சொல்லமாட்டார் சீக்கிரம்சென்று அவனை யிங்கு வரச்செய்யுங்கள்.

தோழி - வசனம்.

காவலனே! சூடாமணியை உள்ளேவரச் செய்வாய் ஆகியின், உத்திரவு.

காவலன் - வசனம்.

அய்யா! தாங்கள் உள்ளே போகலாம்.

சூடாமணி - தரு.

வந்தனம் தந்தேன் (என்ற வர்ணமெட்டு.)

மஞ்சரிசுகமா — சிங்காரமஞ்சரிசுகமா — ம
அஞ்சலாவும்குழல் — ரஞ்சனியேசுக
அஞ்சுகமாகிய — வஞ்சியரே
மாசிலா மாசிலா — மாசிலாமதிவதனியே — ம
நேசியேசுகமா — என்விசுவாசியே சுகமா
காசினியோர்புகழ் — பூஜிதமேவும்
ஆசையே — மான்குயிலோசையே
காணவே காணவே — காணவே வந்தேன் கண்மணி — ம

வசனம்.

எனதன்பிற்குரிய ஆசைவதனி! நின்குசலம் யாது, உனது தாய் பந்தமித்திரர் தோழிகள் முதலானவர் க்ஷேமந்தானே?

சிங்காரமஞ்சரி - விருத்தம்.

அருமைசேர் மித்ராநானும் அரனருளாலேக்ஷேமம்
பெருமையாம் எனதுதாயார் பிதாமற்றோர் க்ஷேமந்தானே
விருப்பமாயிங்குவந்த விசேடமதென்றுவுந்தன்
கருத்தையான்அறியவேண்டி காரணந்துரைசெய்வாயே.

சிங்காரமஞ்சரி - வசனம்.

என்னருமை மித்ரா! அம்பிகையின் அருளால் நானும் தாயார் தந்தையர் முதலானவர்களும் குசலமே? ஆயினும் நீ இதுவரையிலும் என்னைவந்து பார்க்க பிரியமில்லாதிருந்து இப்போது வந்து பார்க்க

ணயிலைசந்தது போலிருக்கிறது. இதுதான் நாம் நேசித்த தன்மை, நாமிருவரும் பள்ளியில் வாசித்தபோது சகோதரர்களைப்போல் இருந்தும் இருவரும் சமமாக வசித்ததும் என் நினைவு உனக்கு இல்லாமலே போய்விட்டதல்லவா.

சூடாமணி - வசனம்.

சுந்தரி! உன்னை பார்க்கக்கூடாதென்ற எண்ணம் எனக்கு கொஞ்சமேனும் கிடையாது, சதா உனது ஞாபகமேயாயினும் நீயோ பருவமடைந்து இருக்கிறாய், இந்த சமயம் கன்னிகாமாடத்தில் வைத்து ஆடவர் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாதென்ற உன் தந்தையின் உத்திரவை கேட்ட நான் மாத்திரம் வரலாமோ? ஆயினும் இப்போது மாத்திரம் வரலாமோ? வென்றால், உன்மீதிலுள்ள விசுவாசத்தினாலும் உனக்குவரும் சுகதுக்கம் எனக்கும் சார்ந்ததாகையால் இப்போது உன்னுடைய சுகத்தை கோரியும் என் சந்தேகத்தையும் நிவர்த்தி செய்து கண்டறிந்து போகலாமென இங்கு வந்தேன், வந்தது குற்றமானால் இனி இங்கு வாரவில்லை.

சிங்காரமஞ்சரி - வசனம்.

நீ வந்தது குற்றமல்ல குணந்தான், உனக்கென்ன சந்தேகம் வந்தது, நீ எதை என்னிடம் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும், உனக்கில்லாத ஞானமா? நீ வாசிக்கவில்லையா? பரிசையுபயிற்சியில்லையா? காரணம் சொல்லப்பா.

சூடாமணி - விருத்தம்.

மன்னவிக்ரமவர் வள்ளலின்றன்
மாதவத்திலேயுதித்த மடந்தேகேளாய்
அன்னையின்வயிலுள்ள ஐம்பத்தா[illegible]
அரசர்களின்ருவியத்தை உனக்குக்காட்ட
ஒன்றாகுமீமிசைபோது இகழ்ந்தாயின்[illegible]
உலகெலாமேகொதிப பாலுமன்னியே
தென்னகாரணமெனவே உன்னைக்கேட்க
எந்திரைதுயேவின்னணம் யான்வந்தவாரே.

55915

சிங்காரமஞ்சரி - வசனம்.

மித்ரா! என் தந்தையார் ஐம்பத்தாறு அரசர்களின் ரூபத்தை எனக்கு காண்பித்து அவைகளில் எந்த அரசன்மீது பிரியமென்று

கேட்டார், எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. அதாவது எனக்கு சமதியாகவும் மீசரமாகவும் வாசித்த பூமான்கள் அப்பட்டத்தில் ஒன்றுமில்லாதிருக்கக் கண்டு வேண்டாமென்று மறுத்து வந்தேன், அன்றியும் எனக்கு சமமாகவும் நான் வினவும் கேள்விகளுக்கு பதில் சொல்லக் கூடியவனாகவும் இருக்கக்கூடிய புண்ணியவானையே நான் மணர்வேனென்றும் எக்குலத்தில் பிறந்தவனானாலும் சரி, என்று சொல்லி வந்தேன், அப்படி நான் சொன்னது குற்றமல்லவே,

சூடாமணி - வசனம்.

சரி சரி ஞாயமே? அப்படிக்குத்தான் செய்யவேண்டும், அதுதான் விவேகிகளுக்கு அடுத்தது, அப்படி செய்யாவிட்டால் நாம் இதுவரையிலும் கஷ்டப்பட்டு வாசித்த கல்வியெல்லாம் வீணாய் போய்விடுமே? ஆனால் நீ இந்த வார்த்தையை உனது தந்தையாரிடம் தெரிவிக்க என் பிதாவும் அரிகிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தவர் என்னிடம் சபையில் நடந்ததை ஆதியோடந்தமாய் தெரிவித்தார். நான் வெகு சந்தோஷமடைந்து உனக்குத் தகுந்த நாயகனை கண்டுபிடித்து விவாகம் செய்ய தீர்மானித்து நாயகனையும் கையுடனிங்கு அழைத்து வந்திருக்கிறேன்.

சிங்காரமஞ்சரி - வசனம்.

சகி! பார்த்தனையா? சிநேகிதத்தின் தன்மை, இருந்தால் இப்படியல்லவாயிருக்கவேண்டும். பால்யத்திலிருந்த விசுவாசத்தை மனதிலெண்ணி நம்முடைய மித்திரியின் மணம்போல் நாம் முடித்து வைக்க வேண்டுமென்று எவ்வளவு பிரயாசையோடு கணவனைப்பார்த்து அவனையும் இங்கு அழைத்து வந்திருக்கிறாராம். நீங்களெல்லாம் இருக்கிறீர்களே! என்ன பிரயோஜனம், சோற்றுக்குக்கேடும் பூமிக்கு பாரமாகவும் இருக்கிறீர், ஒற்றுமையென்றால் இப்படிக்குத்தானிருக்கவேண்டும்.

தோழி - வசனம்.

அம்மா! எங்களுக்கு இந்தத்தொழில் செய்யத்தெரியாது, அவருக்கு இந்த விஷயத்தில் பழக்கமுண்டு. எங்களுக்கென்ன தெரியும், வெந்ததைத் தின்றுவிட்டு வந்ததை உளறிக்கொண்டு இருக்கப்பட்டவர், இனி போகப்போகத் தெரியும், இன்னும் விசாரியுங்கள்.

சூடாமணி - வசனம்.

சுந்தரி! உனக்கு மீசரமாகவும் சமதியாகவும் நம்மைத்தவிர, வேறே யார் இருக்கின்றார்கள். நீயும் நானும் சமமாக வாசித்திருக்கின்றோம், ஆகையால் இப்போது சபையில் சொல்லிவந்த வார்த்தையானது.

சிங்காரமஞ்சரி - தரு.

அனியாயச்செய்திவை (என்ற வர்ணமெட்டு.)

சபியசனைவரியமே நீசெய்தாயே ச
சரிதானென்னை யனு சரித்திடுவாயே
சரிஇயேதது நீயும் புவிமீது ச

சிங்காரமஞ்சரி வசனம்.

பேஷ்! பேஷ்! நன்றாயிருக்கிறது, அதினாலேதான் வந்தவுடனே அஸ்த்திவாரத்தை பலப்படுத்தி பேசினதோ; என்ன நேசா! மித்தமா உனக்கு.

சிங்காரமஞ்சரி - தரு.

என்னமோயிந்த (என்ற வர்ணமெட்டு.)

நீதியாயிந்த வார்த்தை சொல்வது
நீதியாகுமோ யில்லா நிர்மூடனே நீ
மேதினிதனி லெனக்குகந்த
மித்திரனென் றுண்ணியதால்
மித்ரபேதம் செய்யலுற்றாய் நீ

வசனம்.

மித்திரா! உனது புத்தியானது மாறிவிட்டதால் எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது, என் மனதை சோதிக்கின்றனையா? உண்மையில் அப்படியேதானா? நான் உன்னை உண்மையுள்ள என் மித்திரனென்று நம்பி என்கருத்தையெல்லாம் உன்னிடம் தெரிவிக்க, அதையெல்லாம் கேட்டும் செவிடன் காதில் சங்கு ஊதியதுபோல் மறந்து மித்ரபேதம் செய்ய புறப்பட்டனை, இதுகூடாது? இந்த எண்ணத்தை இதோடு, தொலைத்துவிடு வீண்பழி வந்துசேரும்.

சூடாமணி - தரு.

எதனுலெனைப் பலவிதமாக பேசுகிறாய்
எனைவிடவேறெவர் யாரும் காணேனே சகி

வசனம்.

நாயகி! என்னை ஏன் நிந்திக்கிறாய்; உன் கன்னிப்பருவம் வீணாய்ப் போய் விடுகிறது, என்னைவிட வேறே யாரிருக்கின்றார்கள், நானே உனக்குத் தகுந்தவன், நீ கேழ்க்கும் கேள்விகளுக்கு நானே பதில் சொல்லக் கூடியவன், அப்படியிருக்க ஏன் என்னை மறுக்கிறாய்.

சிங்காரமஞ்சரி - தரு

அமைச்சன் புத்திரனை நீ என்னை
ஆருமோமணம் செய்ய அறிவிலா மூடா நீதி
சமயிலாவுனை நானும்கோரி
தரணியும்பொருக்குமோ ஓ ஓ
தப்பியே மடையா நீதி

வசனம்.

அடே! அறிவில்லாதவனே, என்னவார்த்தை சொல்லத்துணிந்தனை, எட்டாக்கனிக்கு முடவன் கொட்டாவி விட்டதுபோலிருக்கிறது, நீயோ; அமச்சன் புத்திரன், என்னை மணம் செய்ய நினைப்பது, கனவில் கண்ட புதையல் போலாகுமே; அடா! மடையா? என் தந்தையாரிடம் உன் தந்தை சேவகம் செய்து பிழைக்கக்கூடியவர், அவருக்கு பிள்ளையாக நீ எனக்கு ஏவல் செய்யக்கூடியவன், உன்னை நான் வதுவை செய்துகொண்டால் உலகம் நகைக்கும், யாரேனும் கேட்டாலும் வெட்கக்கேடு, இனி இவ்வார்த்தையை என் முன் பேசாதே, இனி என் கோபத்திற்கு ஆளாகுவாய், உன்னை மித்திரனென்று இதுவரையிலும் நினைத்து மரியாதையாக வார்த்தையாடினேன், இச்சேதியை தந்தையார் அறிந்தால் உனக்குத் துன்பம், நேரும் இனி இங்கு நில்லாதே போய்விடு.

சூடாமணி - தரு.

உனைப்போலவேபல கலைகள்வல்லோ நானுமே
எனை மணம் முடிப்பது உனக்காகுமோ சரி

வசனம்.

அடி என் காயகி! என்னை தூஷிப்பது நியாயமல்ல. ஏனென்றால் நீ உன் தந்தையிடம் உரைத்தது எப்படி. என்றால், எக்குலத்தில் பிறந்தவனானாலும் குற்றமில்லை, நான் கேழ்க்கும் கேள்விகளுக்கும் பதில் சொல்லக்கூடியவனாகவும் எனக்கு சமதியாகவும் வாசித்த பூமானை மணஞ்செய்வேனென உரைத்ததை கேட்டு நான் இவ்விடம் வந்தேன், வந்தவனை இவ்வாறு தூஷிப்பது அறிவின்மையே, என்னவிருந்தாலும் எண்ணைக்கற்று, எழுத்தை வாசித்தாலும் பெண் புத்தி பேதைமைதான் என்பது உன்னிடம் பிரத்தியக்ஷமாய் கண்டேன், நானோ ஆண் சிங்கம் நீயோ பெண் நீ கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்க காத்துக்கொ

ண்டிருக்கிறேன், அப்படியிருக்கும் என்னை வெறுப்பது நியாயமல்ல. இத
னால் பின்னால் உனக்கு கெடுதியே உண்டாகும்; வேண்டாம் என்
வார்த்தையை கேட்டு அந்தப்படி நடந்தால் உனக்கு சுகமுண்டு.

சிங்காரமஞ்சரி - தரு.

தாயே உமக்கிந்த (என்ற வர்ணமெட்டு.)

சூடாமணியிது சரியா சரியா சரியா சூ
நாடும் சிரித்திடும் நகிலும்வார்த்தையை கேட்டால்
நலமல்லவே நீபோடா போடா போடா சூ
தந்தை யிதனைக்கேட்டால் தண்டனை வந்துவிடும்
சாற்றினேனுனக்கே மெய்யா மெய்யா மெய்யா சூ
இந்தபுத்தி யுனக்கு எவரூதினாடா
என்னை கருதாதே போடா போடா போடா சூ

வசனம்.

அடே சூடாமணி! இன்னமும் உன்மீதில் எனக்கு தயை ஏற்படு
கிறது, ஏன்; நாம் பால்யத்திலிருந்த நேசத்தை யோசிக்க அந்த பாச
மானது என்னைவிட்டு விலகவில்லை, ஆகையால் இனி இவ்வார்த்தை
களை சொல்லிக்கொண்டு இங்கு நிற்பையேயானால் தந்தையின் மூலமா
மாய் உனக்கு விபத்து ஏற்படும், ஆகையால் போய்விடு. மரியாதையாய்
சொல்லுகிறேன், எனக்கு கோபத்தை மூட்டாதே பேயே! நீ வாசித்த
தன்மை இதுதானோ? நான் அழகுள்ளவளாக இருந்தாலும் தன்மையை
கவனிக்கவேண்டாமா? முட்டாளே! நீ கற்றறிந்த மூடன், அடா! சச
டனே, அப்புறம்போ! என்னருகில் நெருங்காதே; இனி தோழிகளாலே
யே உனக்கு அவமரியாதை நடக்கும், போய்விடு, இனி ஒன்றுமே பே
சாதே.

சூடாமணி - தரு.

கந்தா உனக்கிந்த (என்ற வர்ணமெட்டு.)

ஐயோ தடை செய்யாதடி மையல் தீரடி ஐ
வையகத்திலுன்னைவிட்டு மற்றொரு மங்கைமுகத்தை
யாதாசே பாரேனடி மருவிதருவாய் சுகத்தை ஐ

சொல்லச்சொல்ல புன்சிரிப்பை சொற்குறிப்பாய்காட்டுறாய்
மெல்லமெல்ல என்னருகில் மேனிமையல் மூட்டுறாய்
அல்லிலே அரிக்கும் சந்திரே அன்னையும் பாரூட்டுறாய்
அன்னமே யென்பாபமா இன்னமுந்தான் கோபமா
என்மேல் மனஸ்தாபமா இன்னல் உனக்காகுமா
சரிதான் சரிதான்போதும் மெத்த மெத்த கெட்டிக்காரி ௩

எப்படி எப்படி சொன்னாலும் ஒப்பேனென்றுரைக்குறாய்
அப்படியிப்படி கைவீசி அலுக்குறாய் குலுக்குறாய்
அற்பமாய் பழிக்குறாய் பற்பல நினைக்குறாய்
உற்றதை உரைக்குறாய் கற்றதை யளக்குறாய்
இஷ்டமானாற்சொல்லு இல்லையென்றால் செல்லு
அஷ்டி நீயோர்புல்லு சும்மாஏன் வீண்வல்லு
ஜாலமின்னம் செய்யாதே சம்மதமென்னடி மானே
காலத்தை வீண்போக்காதே கருத்தையுரைப்பாய் மாதே ௪

சிங்காரமஞ்சரி - தரு

ஆர்காணும் நீர்சில (என்ற வர்ணமெட்டு.)

வாடிபோடி யென்று பேசுதல் நீதியோ
மன்னவனே உனக்கென்ன பெண்ஜாதியோ
வேடிக்கையாகவே கூடிக்குலாவிட
வேறிடம் யாரிடம்பாரின்றே யாரிடம் பேசுறாய் வா

பாக்கியமுமெல்லா சிலாக்கியமுந்தான்
யோக்கியமுமிங்கு யார்க்கு வேணுமடி
தேக்குமினிப்பாரை வாக்கியத்திற்கோரான்
சித்தங்கலங்கிடேன் சத்தியம் தானிது வா

காமத்தினாலுந்தன் சேமக்குலைந்திடும்
ஏமன்பதிமுக ஏணி நிலைத்திடும்
நீமதத்தால் சொல்லும் நியாயம் பலிக்காது
நேசித்துவிணாக பாஷிப்பதைவிடு வா

சந்தம்.

பலவேதாகமங்களோனாலும் பலகால்படித்துபயனென்
குலகாரயாவிருப்பேன்புடைப்பு கூவாதொழிந்துபோவாய்.
உலகாதியென்றும் நிறைபரமூர்த்தி உருவத்தைக்கண்டுபேணகாமா
மலைபோலின்று மதியேகுலைந்து மடையாநீசெல்வாய் தடியா.

வசனம்.

அடீ! பஞ்சமாபாதகி! கொஞ்சமேனும் நெஞ்சஞ்சாமல் என்னிடம் இந்த வார்த்தையை முகஸ்துதியாய் பேசின உன் நாவை அறுத்தெறியேன், மடையாள்! விவேகமற்றவளே! நீ எந்தவிதத்திற் செளக்கியம் படைத்தவள்! எனது மாதா, உன் ஆசையானது எப்படி இருக்கிறதென்றால் ஆகாசத்தில் கட்டியிருக்கும் தேன்மீது முடவன் இச்சை வைத்தது போலிருக்கிறது, பாழும் இச்சையால் உனக்கு இம்சையேவரும், சீக்கிரம் இதைவிட்டு விலகிவிடு, மறுவார்த்தை யொன்றும் பேசாதே.

சூடாமணி - தரு.

வைக்கிலியோ இவள் (என்ற வர்ணமெட்டு.)

சித்ரமயிலைப்போலிருக்கு மேனி ஜாதி
சித்தினியிருக்க அபிமானி காமன்
செப்பமொழிக்குரிய ஞானி நீயோ
வெகுபொருகேளே மிருத்தொரு
மனைவயடியேனை கணியால்
சொரிதுடிசே மதுமாளிகைபோல்
இதோனையாளாகுது தினாவி அடி
வந்துகன்னத்தினை கீழடிவிடும்
மப்புரிவதாம் தழுமென்றடி அடி
வஞ்சனைகள் செய்வது மென்றடி ஓகோ
மதன்விடுக்கணை பெறுமலர்பட
வருமென்னுமை மலரணைப்பு
வாடிநீ கிடிமோடி அடி
மாதுயிசை சாறுமல்லோடு

வசனம்.

என்னுமைக்குத்த சிங்காரி நீ என்ன எவ்வளவு பேசி போதிலும் உன்மீதுள்ள பிரியத்தினால் எனக்கு கோபமேவராது, என் விருப்பத்தைப் பெட்டி என்னை விவாகம் செய்துகொண்டால் உனக்கு சல்லசகம் கிடைக்கும், இல்லாவிட்டால் உனக்கு வருத்தமே உண்டாகும்.

சிங்காரமஞ்சரி - தரு.

இன்னமுமிச ஏனோ அம்மா (என்ற வர்ணமெட்டு.)

இத்தனைநீயுமெனக்கு ஏன்பிறந்ததோ இ
சொல்லுவோர்களைப்போலின்று சொல்லுவதில்லைபோறுமடா இ

கலைமுறையாய் கற்றிருக்கும் கல்லாதவன்போல்
கிலேதவர்க்குசொன்னமொழியால் நெஞ்சம்வெருகைப்போ இ

தக்கதசொல்லும்லவல் செய்வோன் தமையனுக்கேகான்
மைந்தனேமானேகுட்டிவெது மானிலத்தெங்கேனுமுண்டோ இ

வசனம்.

அடா மட்டி! என்னை கிட்டி வாராதே! எட்டிநட, தூண்டி முனையில் இருக்கும் மாமிசத்திற்கு ஆசைப்பட்டு மீனானது தன்னுயிரை எப்படி தொலைக்கிறதோ அதைப்போல் என் மீதிலுள்ள ஆசையால் உன் வாழ்நாளை வீணாய் கெடுத்துக்கொள்ளப்போகிறாய்; அடா மதிமந்தா!

சந்தம்.

1 போபோபோமூடா பெண்ணைதகேடா
புவியாவுனக்கு விதியா

2 சீசீசீவுந்தன் செயலென்னநோக்கும்
சேசேசே உனக்கழகோ

3 ஆஆஆ என்தனைநுகேநின்றால்
பழிவாயே நீயுங்கெடுவாய்

4 முழுமூவுந்தன் மதியென்னமதியோ
ஒடிப்பிழைத்து போவாய்,

வசனம்.

சுயமாத்துமார்த்தனே! கசடனே கடகெட்ட பெயனே! நான் கட்டிக் கட்டும் வேலையை சிரசாகவகித்து நடக்கக்கூடிய வேலைக்காரனாகிய உன்னையா? நான் விவாகம்செய்துகொள்வது, அடா மட்டி, பசிக்கு பணம் பழம் தின்னப்பார்க்காதே? "கெட்டதாயின் வெட்டெனமற" என்னும் நீதியை அறிந்தவனாதலால் இதனாம் பேசாமல் சென்றுவிடு, எவ்வளவு யோசித்தாலும் உன் குணத்தின் தன்மையானது மாறவில்லை, நீ என்ன செய்வாய், பாவம்! உன்மீது குற்றமில்லை, நீ செய்துவந்த சாவகாசதோஷம்.

சூடாமணி - வசனம்.

ஏ! வித்யாமஞ்சரி, சபையில் நீ சொன்னவார்த்தையை கொஞ்சமேனும் கவனிக்கவில்லை. அதாவது எந்த குலத்தில் பிறந்தவனானாலும் குற்றமில்லை, வாசிப்பில் எனக்கு மேலானவனாகவோ அல்லது சமமாகவோ இருக்கவேண்டும், அன்றியும் நான் கேட்கும் கேள்விகளுக்கு பதில்

தெரிவிக்கும் மேலானவனையே நான் வதுவை செய்துகொள்ளுவேன்; பிரதிக்கினை செய்தாய் அந்தநாள் நீ சொன்ன வார்த்தையைக் கேட்டு நான் வந்து உன்னை விவாகம் செய்துகொள்ள கேட்டேன் கேட்டதில் என்னை மடையனென்றும் மந்திரியின் மகனென்றும் ஏவல் செய்யப்பட்டவனென்றும் என்னைப் பலவாறாய் தூஷித்தனை ஆகையால்.

விருத்தம்

மந்திரியின் மகனெனவே மறுத்தாய்நன்றே
　　மதிநலத்தில் உன்னை எவன்மணக்கவல்லான்
இந்தவிதமெனவுனது செப்பியன்று
　　எழுதினனே அதுஒன்றும் பொய்யாகாது
மந்தபுத்தியுடையவனை யிலகுக்கெட்ட
　　மௌடீகனைவுனக்குமணம் செய்விப்பேன்நான்
இந்தமொழிதவறுவேனே லென்னையென்றும்
　　இயம்புவாய் மடையனென விளம்புவாயே.

வசனம்.

அடி பேதாய்! உனக்கு சர்வமூடனைச்சொல்லிவந்து விவாகத்தை முடித்துவைக்கின்றேன். அப்படிச் செய்யாவிட்டால் என்பெயர் ஆடாமணியல்ல. நீ சொன்னதுபோல் மடையனெனவே செப்புவாய்.

சிங்காரமஞ்சரி - வசனம்.

அடோ ஆடாமணி, நீ சொன்னதுபோலவே சர்வமடையனைக் கொண்டுவந்து எனக்கு விவாகத்தை செய்துவைக்கவேண்டும், அந்த சர்வமூடனையே சகல கலாசம்பன்ன பண்டிதனாகச்செய்து அவன் காலிலேயே உன்னை வணங்கச்செய்கிறேன், அப்படிச் செய்யாவிட்டால் அரசன் புதல்வியாகிய சிங்காரமஞ்சரியல்ல, இதுவே சத்தியம்.

குறிப்பு:— ஆடாமணி சபதம் செய்துகொண்டு
தன் மனையை யடைந்து விஷயத்தை
தன தந்தையிடம் சொல்லுகிறான்.

1-வது சீன். 3-வது அங்கம்.

மந்திரியின் அரண்மனை

மந்திரி - வசனம்.

வத்ஸா! அலர்ந்த செந்தாமரை புஷ்பத்திற்கு நிகருகிய உனது திருமுகமானது இன்று சூரியனைக்கண்ட தாமரைப்போல் வாடியிருக்கவேண்டிய காரணமென்ன, ஆனால் உனக்கு துன்பம் ஏற்பட்டு நிகழ்ந்ததை என்னிடம் ஒன்றும் ஒளியாமல் உரைத்தால் அதற்குத் தகுந்த உபாயம் செய்யலாம்.

சூடாமணி - தரு. ஜெஜூல்

இராகம் இந்துஸ்தான் பைரவி,

என்னென்று சொல்வேன் சொல்வேன்
எந்திழைசொன்னமொழி சொன்னமொழி ஏ
உனைப்போலவேபல கலையோதினேனென
உரைத்துமணம் செய்துக்கொள்ளச் சொன்னேன்
சொன்னேனே வருந்தியேசினள் ஏ
ஏவல்செய் வோன்மகனென
காரேறுமணம் செய்வதென
இழிவுடனென்னை னென்னனென்ன பேசியேபேசினள் ஏ

வசனம்.

பிதா! தாங்கள் சபையில் சிங்காரமஞ்சரி தெரிவித்த பிரதிக்ஞை வார்த்தையைக்கேட்டு என்னிடம் தெரிவிக்க, நான் சிங்காரமஞ்சரியிடம் சென்று என் கருத்தை தெரிவித்து என்னை விவாகம் செய்துக் கொள்ளும்படி கேட்டேன். அதற்கவள் என்னை பலவாறாக தூஷித்து என்னை மடையனெனவும் ஏவல் செய்யக்கூடியவனென்றும் பேசினள்.

விருத்தம்.

சந்ததித்தானந்த வார்த்தைக்கோரி
தலையெடுத்திமகிழ்ந்திட்ட தந்தையேகேள்
புத்தியுள்ள சிங்காரமஞ்சரிக்கு
பிறந்ததர்க்குணத்தை போக்கவேண்டி

நத்தியவன்மனைக்கேகி பால்யத்தில்
நடந்தவார்த்தை செப்பிமாலைசூட்ட
எத்தனையோவிதமாக உபாயம்சொல்லி
ஏற்றினேன் என்சொல்மாற்றினளே.

தந்தையே! என்னை விவாகம் செய்துக்கொள்ளச்சொல்லி பல வாகுக மன்றாடிகேட்டும் நியாயங்களை சொல்லியும் கேளாமல் என்னை மடையனென பேசி ஏகினள்.

மந்திரி - வசனம்.

குழந்தாய்! நீபோய் கேட்டும் விவாகம் செய்ய மறுத்ததுமல்லாமல் உன்னை கேவலமாக பேசினதும் தவிர, ஏவல் செய்யக்கூடியவனுடைய மகனென உரைத்தனளா; ஆ ஹா! அப்படி தெரிவிக்க, அதைக் கேட்டு நீ யொன்றும் தெரிவிக்கவில்லையா?

சூடாமணி - வசனம்.

பிதா! அவள் அந்த வார்த்தை தெரிவிக்க, எனக்கு கோபம் பிறந்து நானொரு பிரதிக்ஞைசெய்து வந்தேன், அதாவது சர்வமூடனைக் கொண்டுவந்து உனக்கு விவாகத்தை செய்து முடிக்கிறேன் என்று சபதம் செய்துவந்தேன், அதை அவசியம்முடிக்கவேண்டும் பிதா! இதுவே எனது கோரிக்கை.

மந்திரி - வசனம்.

குழந்தாய்! நீ யாதொன்றுக்கும் கவலைப்படாதே? இப்போதே நானும் அரசனிடம் சென்று மணமகனைக்கண்டு அழைத்து வருகிறேன் என்று சொல்லி இரண்டுமாதம் விடுமுறை பெற்றுக்கொண்டு வருகிறேன்.

சூடாமணி - வசனம்.

ஆனல், பிதா! நானும் அரசனிடம் வருகிறேன்.

மந்திரி - வசனம்.

சரி, மிகவும் நல்லது, நாமிருவரும் செல்வோம்.

2-வது ஸீன்.

அரசன் சபை.

மந்திரி வசனம்:— மகாராஜா! வந்தனம் செய்கிறேன்.

அரசன் வசனம்

மந்திரி! எது சூடாமணியும் வந்து இருக்கிறான், என்ன விஷயம்?

சூடாமணி வசனம்

அரசே! தமது புத்திரியும், நானும் பால்யத்தில் இணைபிரியாது பள்ளியில் வாசித்து வந்தோம். அந்த விசுவாசமானது என்னைவிட்டு மாறவில்லை, அதை யுத்தேசித்தும் தமது சபையில் உமது மகள் வந்து தனக்கு நிகராக வாசித்த பூமானையே விவாகம் செய்துகொள்ளுவேனென்று சபதம் செய்ததாக தந்தையின்மூலியமாய் அறிந்த நான் இந்காரமஞ்சரிக்குத் தகுந்த கணவனைப் பார்த்து விவாகம் செய்துவைக்கலாமென்ற என்னம் ஏற்பட்டது தம்முடைய உத்திரவை எதிர்பார்க்கிறேன்.

அரசன் வசனம்

சூடாமணி! நல்ல யோசனை செய்தாய், உன் இஷ்டப்படியே சென்று தகுந்த கணவனைப்பார்த்து அழைத்து வரவேண்டிய கடமை உன்னைச் சேர்ந்ததே; உனது தந்தையாரையும் அழைத்துக்கொண்டு போய் இரண்டுமாத தவணையில் வந்து சேருங்கள், சர்வமங்கள முண்டாகட்டும், போய்வாருங்கள்

குறிப்பு:— மந்திரியும், சூடாமணியும் அனேக இடம் சுற்றிப் பார்த்தும் சர்வமூடன் கிடைக்காததினால் கடைசியாக காட்டின்வழி வரும்போது யாதவர்கள் யொன்றாகக் கூடிக்கொண்டிருப்பதை இருவரும் கண்டு நிற்க.

3-வது ஸீன்.

இடம்—காடு காலம்—காலை

ராமகோனான் தரு.

கொண்டலாரா டையோ டையோ
கொண்டலாரா டையோ டையோ கொ
மாமாவாடா மச்சான்வாடா மாட்டைக் கூட்டிபோடா
அத்தான்வாடா அண்ணாவாடா ஆட்டையிட்டு வாடாவாடா கொ

ராமன் வசனம்

அடே பாட்டா! ஆடு ஊட்டபார்க்குதடா.

கிழவன் வசனம்

அடே பையா! நான் ஆட்டபார்க்கிறேன்; நீ மரத்திலே ஏரி ஆட்டு குட்டிக்கி தயெ ஒடிச்சி போடண்டா.

ராமன் வசனம்

ஏ பாட்டா! மாட்டு மந்தைலே சாளமாடு கன்னுபோட்டுது அங்கே போய் சீயிபாலு கரந்து வாடா.

கிழவன் வசனம்

அடே பையா! சீக்கிரதயை ஒச்சி கீயேபோடு ஆட்டு குட்டிங்கோ வாள்வாள் அண்ணு கத்துதங்கோ.

குறிப்பு:— ராமன் மரத்திலேரி தழைகளை யொடித்து விட்டு கீழே இரங்க முடியாமல் தவிப்பதை மந்திரியும், சூடாமணியும் பார்த்துக்கொண்டிருக்க.

ராமன் வசனம்

ஏ பாட்டா! நா தாய விரங்கமுடிலே பயந்து வருது பாட்டா மேலே கின்னுகினு மரத்தே யேவெட்டினு நா தாயவந்திடுவே பாட்டா! என் புததியை பாத்தயா.

கிழவன் வசனம்:— டே பேரு! அப்படித்தா செய்யண்டா.

சூடாமணி வசனம்

பிதா! மடையனென்றால் இவனைத்தான் சர்வ மடையனென்று சொல்லவேண்டும். இவன் மரத்தின்மேலேரிக்கொண்டு கீழே இரங்க முடியாமல் அடிமரத்தை வெட்டினால் கீழே வந்து விடுவோமென்று என்னி அடிமரத்தை வெட்டுகிறான், இவனையே நாம் பயமுருத்தி அழைத்துக்கொண்டு அந்த சிங்காரமஞ்சரிக்கு விவாகத்தை முடித்து வைக்கவேண்டும் பிதா.

மந்திரி வசனம்

உன் இஷ்டம்போலவே செய்யலாம்.

குறிப்பு:— தரையிலிருக்கும் இடையர்களை எல்லாம் அடித்து வொட்டிவிட்டு மரத்திலிருக்கும் ராமனை இரங்கச்சொல்லி அவனை பிடித்துக் கொள்ளுகிறார்கள்.

சூடாமணி:— அடே! நீ யாரடா?

ராமன்:— நா மனுசேன்.

சூடாமணி:— நீ மனிதன்தான், நீ என்ன ஜாதி?

ராமன்:— நான் ஆண்ஜாதி.

சூடாமணி வசனம்

நான் கேழ்ப்பதற்குத் தகுந்த பதில் சொல்லவேண்டும், இல்லா விட்டால் உன்னை இந்த கத்தியால் வெட்டிவிடுவேன்.

ராமன் வசனம்

ஓ பாட்டா! இங்கே ரெண்டு பூச்சுவந்து என்னை புடிச்சுகின்னு அடிக்குதடா, பாட்டா! ஆட்டபார்ரு ஆட்டபார்ரு;

சூடாமணி வசனம்

அடே! நாங்கள் பூச்சியல்ல ராஜா குலம்.

ராமன் வசனம்

நீங்க கோஜாவா? ஏ! என்னை அடிக்கிரிங்கோ.

சூடாமணி வசனம்

அடே! உனக்கு கலியாணம் ஆச்சுதடா.

ராமன் வசனம்

அதெல்லா நீ ஏ கேக்கிறே?

சூடாமணி வசனம்

அடே! உனக்கு கலியாணம் செய்து வைக்கிறோம், செய்து கொள்ளுகிறாயா;

ராமன் வசனம்

நீ என்ன கலியாணம் பன்றது, நானே பண்ணிகிறேன்.

சூடாமணி வசனம்

அடே! உனக்கு நல்லகாலம் வந்துவிட்டது, ராஜாமகளை உனக்கு கலியாணம் செய்கிறோம் நீ ராஜாவைப்போல் இருக்கலாம், அவள் உனக்கு வேண்டியதை எல்லாம் கொடுப்பாள்.

ராமன் வசனம்

ஆமா; ராஜாமகளை கல்லாணம் பண்ணிகினி என்ன பண்றது.

சூடாமணி வசனம்

உலகில் எப்படி யிருக்கிறார்களோ! அதைப்போலவே நீயும் இருக்கிறது.

ராமன் வசனம்

ஊர்லே இருக்கிறவங்களே, நா பாக்கில்லேயே.

சூடாமணி வசனம்

அடே! என் வீட்டுக்கு வாடா.

ராமன் வசனம்

ஐயய்யோ! நா வர்லே, ஒங்க ஒடம்பிலே மினுகிட்டாம்பூச்சங்கோ ரொம்ப மேயுது ஐயோ எப்பாடா!

4-வது சீன்

அரண்மனை.

சூடாமணி வசனம்

ராஜாக்கள் போடும்படியான உடுபாவனைகள் இப்படித்தான் இருக்கும், ஒன்றும் பேசாதே, எங்களோடு வா.

குறிப்பு:— ராமன் தனது கம்பிளியையும், கோலையும், சாப்பாட்டுப் பானையும் எடுத்துக்கொள், அதை எல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு வீட்டுக்கு அழைத்துச் செல்லுகிறார்கள்.

மந்திரியின் வீடு.

அடே! எங்களைப் போல இந்த சட்டையைப் போட்டுக்கொள்.

ராமன் வசனம்

ஐயோ! ஒரு கையை காணுமே.

சூடாமணி வசனம்

இந்த கால்சட்டையைப் போட்டுக்கொள், இதை தலையில் போட்டுக்கொள்.

ராமன் வசனம்

இது கஞ்சகுடிக்க நன்னாயிருக்கும்.

சூடாமணி வசனம்

அடே! அதெல்லா மிருக்கட்டும் நாங்கள் நடப்பதைப்போல் நடக்கவேண்டும். நாங்கள் உட்காருவதைப்போல் உட்காரவேண்டும் தெரியுமா?

ராமன் வசனம்

அட! எப்பப்பா, அம்மா பூச்சகாட்ரே; அப்படி செய்யடா, இப்படி செய்யடா, கோவம் வந்துச்சே தடியாலே ஓரே அடி அடிச்சட போரய்யா, என்னமோ கடக்றதுனு பார்த்தா அம்மா மேலே ஏர்ரிங்கே.

சூடாமணி வசனம்

ராமனை அடித்து பயமுருத்திவிட்டு இதைப்போலவே உட்காரு

ராமன் வசனம்.

ரூங்கை பேர்ல்வா உக்காரது.

சூடாமணி வசனம்

அடே! உன்னை ராஜசபைக்கு அழைத்து போகிறோம், அங்கே போய் ஒன்றும் பேசக்கூடாது அந்தஇடத்தில் ராஜன்மகள்வருவாள் வந்ததும் உன்னை ஒன்று அல்லது இரண்டாவென்று கேழ்ப்பாள், அது சமயம் நீ ஒரு விரலை காண்பிக்கவேண்டும் பிறகு இரண்டா மூன்று வென்று கேழ்ப்பாள் நீ இரண்டுவிரலை காண்பிக்கவேண்டும்.

ராமன் வசனம்

ஆமா ஐயா! பொயிலைகாம்பு வெத்திலைசொருகு எனக்கு உணுமே அதெல்லாம் கொடுப்பாளா.

சூடாமணி வசனம்

எல்லாம் கொடுப்பாள்; சபைக்கு வந்து ஒன்றும் பேசக்கூடாது.

ராமன் வசனம்

பேச்சு வந்து விட்டால் என்ன செய்றது.

சூடாமணி வசனம்

உன்னை இரண்டு அடி அடிக்கிறது, ஜாக்கிறதை.

சூடாமணி வசனம்

பிதா! நான் சபைக்கு வரக்கூடாது வந்தால் சிங்காரமஞ்சரிக்கு சந்தேகம்வந்துவிடும், தடங்கள் ஏற்பட்டால் நாம் முயர்ச்சித்தகாரியம் வீணுய் போய்விடும். ஆகையால் நீங்கள்சென்று விவாகத்தை முடித்து விட்டு வாருங்கள், நாம் வேறு ராஜ்ஜியம் சென்று பிழைக்கலாம், இது தான் தந்திரம், இனி இங்கிருக்கலாகாது.

1-வது சீன். 4-வது அங்கம்.

காலம்—பகல்

அரசன் சபை.

அரசன் வசனம்

மந்திரி! நமது முதல் மந்திரியாரும் அவர் குமாரன் சூடாமணி யும் எனது குமாரத்திக்குத் தகுந்த கணவனை தேடி கண்டுவருவதாக சென்றவர் மாதம் இரண்டாகியும் இதுவரையிலும் வந்துசேரவில்லையே.

மந்திரி வசனம்

அரசே! யோசிக்கவேண்டாம் சென்ற மந்திரியார் அவசியம் மண மகனைக் கண்டுபிடித்து வருவாரே தவிர வீணுவாய்வரமாட்டார் ப்ரபு! அவரும் இதோ வந்து விட்டார்.

அரசன் வசனம்

மந்திரியாரே! சென்ற காரியம் முடிவாச்சுதா, நல்ல செய்தியாக சொல்லவேண்டும்.

மந்திரி வசனம்

மந்திரியார் சென்றால் அந்த காரியம் முடியாமலா போய்விடும் தமது புத்ரிக்குத் தகுந்த கணவனுகவே வெகு சிரமப்பட்டுக்கொண்டு வந்திருக்கிறேன் கல்வியிலேயே கல்வியில் சிறந்தவர் குணத்திலும் மேன் மைப்பட்டவர் ஆனல் இப்போது மவுனம் சாதிக்கிறர் வாய்திறந்து பேசமாட்டார்.

அரசன் வசனம்

ஆனல், மகள் கேழ்க்கும் கேள்விகளுக்கு வாயைத்திறந்து எப்படி பதில் சொல்லுவார்.

மந்திரி வசனம்

அரசே! சவுஞ்ஞையாக கேட்டால் இவரும் பதில் அப்படியே அளிப்பார்.

அரசன் வசனம்

இரண்டாவது மந்திரியார்! நீர் அந்தப்புரம் சென்று இங்கு நடந்த விஷயத்தை சொல்லி மகளை அலங்காரப்படுத்தி தோழிகள் மூலமாய் குழந்தையை இங்குவரச்செய்வாய்.

மந்திரி வசனம்

சுவாமி! இதில் அமரவேண்டும்.

குறிப்பு:— ராமன் ஒருவிரலை காண்பிக்க மந்திரி ராமனை அண்டிக்கிறான், ராமன் அங்குள்ள படங்களைப்பார்த்து.

ராமன் வசனம்:— ராமண்ணு!

அரசன் வசனம்

மந்திரியாரே! இவர் மவுனம் சாதிக்கிறார், இவர் வாயைத் திறந்து பேசமாட்டார் என்று தெரிவித்தீரே! இப்பொழுது ராமண்ணு என்று சப்த மிட்டாரே.

மந்திரி வசனம்

ப்ரபு! இச்சபையில் அனேக படங்கள் கட்டியிருக்கிறது அதில் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் இந்த உருவங்கள் இருக்கிறது அதில் இளயவர்களாகிய கும்பகர்ணன், விபீஷணன் இவர்கள் இருவருக்கும் பகாரசப்தம் இருக்கிறது மூத்தோனாகிய ராவணனுக்கு பகார சப்தமில்லைப்பு அதை சீர்திருத்தம் செய்ய ராவணு என்று அப்பேரை மாற்றினார், மகாபண்டிதர்.

அரசன் வசனம்

ஆஹா! அப்படியா! இன்றுமுதல் அப்படத்தின் பெயுரை மாற்றி எழுதுங்கள்.

குறிப்பு:— சிங்காரமஞ்சரியை மணக்கோலத்துடன் அலங்காரம் செய்து தோழிகள் அழைத்து வருகிறார்கள்.

அரசன் - வசனம்.

குமரீ! இம்மகாபுருஷன் இப்பொழுது மவுனம்சாதிக்கிறார் நீ ஏதேனும் கேழ்க்கவேண்டியிருந்தால் ஜாடையாகக் கேட்டால் அவரும் ஜாடையாகவே பதில் சொல்லுவார்

சிங்காரமஞ்சரி - வசனம்.

பிதா! சதா மவுனமாகவேயிருப்பாரா? அல்லது சிலகாலம் இப்படியேயிருப்பாரா?

அரசன் - வசனம்.

இல்லை! இல்லை!! ஏதோ காரணத்தை உத்தேசித்து இப்போது இப்படி இருக்கிறார், பின்னால் பேசுவார்.

சிங்காரமஞ்சரி - வசனம்

ஆனால், நான் ஜாடையாகவே கேழ்க்கிறேன்;
கை விரலினால் ஒன்று, அல்லது இரண்டா?

ராமன் - வசனம்.

தன் கைவிரலினால் ஒன்று என்றான்.

சிங்கார மஞ்சரி - வசனம்.

இரண்டா அல்லது மூன்று?

ராமன் - வசனம்.

மூன்று விரலை காண்பிக்கிறான்.

சிங்கார மஞ்சரி

பிதா! நான் கேட்ட கேள்விப்படி உலகம் ஒன்று இரண்டா என்றேன், ஒன்று என்று சொன்னார். அது சரி; பின்னால் மூர்த்திகள் இரண்டா மூன்றா என்றேன்; மூர்த்திகள் மூன்று என்றார். அதுவும் சரியாயிருக்கிறது; இனிமேல் தாமதமின்றி மாலை சூட்டலாமல்லவா?

அரசன் - வசனம்.

சந்தேகமில்லாமல் மாலை சூட்டலாம்.

குறிப்பு:—சிங்காரமஞ்சரி மாலை சூட்டிவிட்டு அந்தப்புரம் செல்லுகின்றாள்.

2-வது சீன்.

ரோட்டு.

மந்திரி - வசனம்.

அடே ராமா! உன்னை சபையில் பேச வேண்டாமென்று சொல்லி இருந்தும் ராமனு என்று கூச்சல்போட்டனையே; போடலாமா?

ராமன் - வசனம்.

ஆமாம் போயா! என்னமோ கலியாணம் அண்ணுசொல்லி இட்டு வந்து ஒண்ணு செய்லியே.

மந்திரி - வசனம்.

ராஜா மகள் வந்து கழுத்தில் மாலே போட்டாளே அதுதான் கலியாணம்,

ராமன் - வசனம்.

சரிதான்! சரிதான்!! மத்தாப்பு வுண்டா, ஒரு பாணம்?வுண்டா, ஒருதப்பு வுண்டா, ஒரு மேளம் வுண்டா, ஒரு எளவுமில்லேயே! பலி கொடுக்கிற ஆட்டுக்கு பூபோற்றதுபோல அக்குட்டி மூகத்தை மூடிக்கினு கழுத்திலே பொட்டிட்டு பூட்டா; இதுதானு! கல்யாணம், என்ன எழவு,

மந்திரி - வசனம்.

ராஜா வீட்டில் இப்படித்தான் நடக்கும் வா! அரைக்கு வந்திரு, உனது பெண்டாட்டி வருவாள், உனக்குவேண்டிய தின்பண்டமெல்லாம் கொண்டுவருவாள்.

ராமன் - வசனம்.

அங்கேவந்து ஏதேனும் காட்டுவாரா?

மந்திரி - வசனம்

உன்னுடன் சந்தோஷமா யிருப்பாள், உன்னை ஒன்றும் சேழ்க்க மாட்டாள்.

குறிப்பு:—ராமனை மஞ்சத்தில் படுக்கவைத்துவிட்டு தான் போய்விடுகிருன். அதுசமயம் ராமன் பிரண்டு கேழெழுகிருன், பின் எழுந்து ப[illegible], விங்காரமஞ்சரி படுக்கை அரைக்கு பலகார வகை கொண்டுவருகிருள்.

3-வது சீன்.

இடம்—பள்ளியறை] [காலம்—இரவு

சிங்காரமஞ்சரி - வசனம்.

இது என்ன புதுமை, நன்ருய் அயர்ந்து நித்திரை செய்கிருர், நித்திரைபங்கமும் செய்யக்கூடாது, ஆனல் அழகாய் ஒரு கீதம் பாடியாயினும் பார்ப்போமா? அப்படிக்குத்தான் செய்யவேண்டும்.

தரு.

மகனேநீ இந்த வன்றவர்ணமெட்டு.

தையலென் மீதிலென்ன கோபம்தானேனடா
கையாலெனை சேர்த்தணைத்தால் காமம் தீருமே
ஐயோவுன்மேல் ஆசையால் அலைகுறேன் புவிமேல் தை
வருவாடா வஞ்சியென்னை மதனதுரையே
தருணமிதிலே தாமதிக்க தகுமோதுரையே தை

வசனம்.

நாதா! இன்னமும் நித்திரையா உனது மனைவி வெகுநேரமாய் இங்கு காத்திருந்தும் இதுவரையிலும் எழுந்திருக்காத தென்னகாரணம்; நான் சீக்கிரமாக வரவில்லை என்ற வருத்தமா! ஏன் இன்னம் மௌனம் சாதிக்கிறீர்; வேறுபதம் ஒன்று பாடலாம்.

விருத்தம்.

காத்திருக்கிறேனடா நீவருவாயெனகாத்து
வழிபார்த்திருக்கிறேனடா காதலெனசந்ததம்பார்த்து
விழிபூத்திருக்கிறேனடா மெத்தவிசாரம்புரிந்து
கண்ணீர்சோர்ந்திருக்கிறேனடா என்றுனைக்குறித்தே.

நாயகா! உம்மைப்போல மணவாளன் கிடைக்க வேணுமென்று வெகுநாளாக காத்திருந்தேன், கிடைத்தும் நீர் என்மீது பராமுகமா இருப்பது மகாபாபம், எழுந்திருந்து என்னுடன் சந்தோஷமாய் வார்த்தையாடலாகாதா? என் துரையே.

தரு.

அன்னையே சீதா (என்றவர்ணமெட்டு)

கருணை புரியடா கனிரசமே கரு
ஒரேபிடியாக வோதுவதாலே!
எதுமே பயனில்லையே கரு
ஏதோ எணதாவி எருதே வாணேனி
எதினி தாமதமே கரு
பருவமிதுவே பாவை எனைச்சேர
பண்புட னோடிவா கரு

வசனம்

நாயகா! என் இன்னும் எழுந்திராக்காம லிருக்கிறீர், நடந்துவந்த சிரமத்தினுல் அயர்ந்து நித்திரை செய்கிறார். ஆனால் தாம்பூலத்தை மடித்து வாயில் இடலாம், (தாம்பூலம் மடித்து வாயில் வைக்க.)

ராமன் வசனம்.

(கரிவுமிழ்ந்து) பாட்டா! ஆடு வாயில் புழுக்கை போடுதடா.

சிங்காரமஞ்சரி வசனம்

ஆ ஹா! யென்ன ஆச்சரியம், நாம் தாம்பூலத்தை கொடுத்தால்; ஆடுவாயில் புழுக்கை போடுகிறது என்று சொல்லுகிறீரே, உம் ஏதோ; சொர்ப்பனம் காண்கிறார். இன்னமொருதரம் கொடுப்போம். (தாம்பூலம் கொடுக்க)

ராமன் வசனம்

பாட்டா! இன்னடா எழவு, சும்மா புழுக்கை போடுதடா, டேடையா ஆட்டெடபாரு! ஆட்டெடபாரு!! பே, பே, பே, பொயிலே காம்பு எங்கடா பாட்டா..

சிங்காரமஞ்சரி வசனம்

ஆ ஹா! ஏதோ சூதாயிருக்கிறது, விபரீதம் நடந்திருக்கலாம். எழுப்பிக்கேட்க்கலாம்; நாதா! எழுந்திருங்கள், எழுந்திருங்கள்.

ராமன் வசனம்

கண்ணை மூடிக்கொண்டு ஒருவிரலை காண்பிக்கிறான்.

20

சிங்காரமஞ்சரி வசனம்

அடியேன் ஆடையாபரணங்களின் ஆழ்ச்சிபோல் ஏதோ ஒன்றின்மேல் கிடந்திருக்க வேண்டும். அவைகளை அதிலிருந்து எடுத்துக்கொண்டு பாதுகாத்து வைத்துக்க.

ராமன் வசனம்

அம்மா தாயே! உன் காலில் விழுகிறேன்; அம்மா! காளிமாதா! ஆருடத்திலே உனக்கு ரெண்டு ஆடு வெட்டுகிறேன், என்னை விட்டுவிடு, நீ என்ன காரியம் சொன்னாலும் செய்கிறேன்.

சிங்காரமஞ்சரி வசனம்

சூத்ரா! என் காலில் நீ விழக்கூடாது, நான் உனக்கு பெண்ஜாதி யல்லவா? நீ யார்; எங்கு இருப்பது, எப்படி இங்கு வந்தாய், எல்லாம் விவரமாய் சொல்லவேண்டும். இல்லாவிட்டால் இந்த கத்தியால் உன்னை கொன்றுவிடுவேன்.

ராமன் வசனம்

நான் ராமயோகுன்னு கட்டிலே ஆட்டையோட்டிக்கு அப்போ ரெண்டு பூச்சி வந்து என்னை பிடிச்சி அடி அடியின்னு அடிச்சி ஒன்னை கட்டு ரெண்டு கட்டு அவுத்தாங்கோ. இங்கு வந்து இக்கதவுக்கப்பு போட்டாங்கோ, உனக்கு கலியாணம் பண்ணுன்னு சொல்லி இங்கே வக்காரவச்சாங்கோ ஒரு குட்டிவந்து கிட்டத்திலே புடவை போட்டு பூட்டார் ஆம்மா பட்டம்மா! என்னை ஒன்னும் செய்யாதே என்னை விட்டு உனக்கு ஆட்டுக்குட்டி பொங்க போட்றேன் தாயே.

சிங்காரமஞ்சரி வசனம்

சூத்ரா! நான் சொல்லுகிறபோல் செய்யவேண்டும்.

ராமன் வசனம்

அப்படியே செய்கிறேன்.

சிங்காரமஞ்சரி வசனம்

இந்த மாளிகைக்கு … ஒரு … சன்னதியிருக்கிறது.

ராமன் வசனம்

அந்த கோயிலே இருக்கிற காளியா நீ;

சிங்காரமஞ்சரி வசனம்

நான் காளியல்ல, நீர் ஸ்நானபானம் செய்துவிட்டு நல்ல பட்டு பீதாம்பரம் உடுத்திக்கொண்டு ராத்திரி 15-நாழிகைக்கு வெளியே போயிருப்பான் அந்த சமயம் நீர் சன்னதிக்கு உள்ளேபோய் கதவை மூடிக்கொள்ள வேண்டும், அப்போது காளிவந்து கதவை திரக்கச் சொல்லுவாள், நீ திரக்காதே, ஏன் என்று கேழ்ப்பாள் அப்போது நாவில் பீஜாக்ஷரம் எழுதினால் கதவைத் திரப்பேனென்று சொல்ல வேண்டும் நாவில் பீஜாக்ஷரம் எழுதுவாள் அவளுடைய அருள்பெற்றுக்கொண்டு நேரே இவ்விடம் வரவேண்டும் தெரிந்ததா; ஜாக்கிரதை.

ராமன் வசனம்

அம்மா! நீ சொன்னது போலவே, காளியாத்தாளண்டே போய் வருகிறேன். அப்புரமாகிலும் என்னே ஒன்னுஞ் செய்யாதே.

குறிப்பு:— ராமன் சன்னதியின் உள்ளேபோய் கதவை தாளிட (காளி வந்து.)

4வது சீன்

காலம் — இரவு.

ஆஹா! என்ன ஆச்சரியம், நாம் வெளியேபோய் வந்தால், ஆலயம் திரந்திருக்கிற வழக்கம், இன்று மூடியிருக்கவேண்டிய காரணமென்ன?

காளி வசனம்

அடே! ஆரடா உள்ளே கதவை தாளிட்டு வைத்திருப்பவன்.

ராமன் வசனம்

நான் ராமகோனாச்சே! நீயாரு? உன் பேரென்ன?

காளி வசனம்

இந்த ஆலயத்தில் வசிக்கும் காளி தேவி.

ராமன் வசனம்

நீ தானா காளி! ஒப்பானோ சொல்லு.

காளி வசனம்

அடே! யான்தான் காளி, கதவைத் திற.

ராமன் வசனம்

நான் கதவை திறக்கமாட்டேன்,

காளி வசனம்

ஏண்டா? திறக்கமாட்டாய்.

ராமன் வசனம்

ஏ அக்கினிலே ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீடா, ஸ்ரீநாசசம் எயிதிரு கை திறப்பேன், அல்லா போனு திறக்கமாட்டேன்.

காளி வசனம்

(தனக்குள்) இவன் யார், தன் நாவில் பீஜாக்ஷரம் மந்திரம் எழுத வேணுமென்று கேட்கிறான். இவன் யார்? ஞானதிருஷ்டியால் பார்த்து ஓஹோ! சித்தாரமஞ்சரியின் கணவன், அவளோ நம்மீது அளவு கடந்த அன்பும் பக்தியும் கொண்டவள், இவனுக்கு அவ்விதம் செய்யாவிட்டால் அவளுடைய சாபம் வந்து கிடைக்கும், ஆகையால் இப்பொழுதே புனிதனுக்குவோம் அடே! இந்த சாளரத்தின் வழியாய் உன்னுடைய நாக்கை நீட்டுவாய்.

குறிப்பு:— சாளரத்தின் வழியாய் நாவை நீட்ட காளி தேவி பீஜாக்ஷரம் எழுத ராமனுக்கு அஞ்ஞானம் விலக்கி சுக்கியானம் உண்டாகி சன்னலை விட்டு வெளியே வந்து அம்பாளை ஸ்தோத்தரிக்கிறான்.

இ-ம் காதகாலக்ஷேபம் நாளைக்-குபதம்.

ஸ்ரீ குரு.

ஸேவகாம கந்த்ரீ ஸிவகாம சுந்தரி

பளைகாரத்தினே [illegible] காருணாமணி என்னை

விமோசன் பாலகப்பா [illegible] சொல்லுவேன் பீடேற்றி

பூரீ திருவிமலை ஈதீஸ்வரகுமாரிச்ஸ்ரீ [illegible] கடாக்ஷமோதீர் கனகசபை

காதன் இணை [illegible] மகிழ்ச்சியுடன் நிலை

ஆதிபராபர சங்கரி ஆனந்தி ஜெகன்மோகினி
மேதினிதனி லுனது பெருமை விரித்திடப்போமோ
பாதிபிரமை யணித்திடும் பரமகிருபா கடாக்ஷி—என்னை
சோதிக்க வேண்டாம் பாலகிருஷ்ணன் சோதரியென்னையாதரி சிவ

வசனம்

தாயே! உம்முடைய அருளைப்பெற்ற நான் இனி பூமியில் வாழ வேண்டுமோ உம்முடைய பாதாரவிந்தத்தை தர விரும்புகிறேன்.

காளி வசனம்

அன்பில் மிகுந்த பக்தா! நீ இன்றுமுதல் காளிதாஸனென பேரை வகித்து சிலகாலம் இருந்து என் பதவியை வந்து சேருவாய்.

காளிதாஸன் வசனம்

சர்வமூடனாயிருந்த நம்மை நல்ல பண்டிதனாகவும் தேவியின் அருளைப் பெரும்படி செய்தும் நம்மை கிருபை பாலித்த குருவாகிய சிங்காரமஞ்சரியிடம் சென்று குருப்பிரசாதம் பெற்றுக்கொண்டு போஜராஜன் சபைக்குசெல்வோம்.

காளிதாஸன் ஸ்தோத்திரம்.

ஜெயஜெய ஓங்காரி ரீங்காரி மாதவி ஜெகத்காரணி
அயனரியும் காண்பதற்கரிதான அம்பிகை ஆதிசத்தி
மான்மழுவு தரித்தவன் மகிழுகற்றேவியே மாயவன் தங்கையே
வான்பூமி பதினாலு லோகமும் துதித்திடும் மங்களதிரிசூலினி
ஆனந்தபைரவி அபிராமி செப்பரிய அனந்த நாமி
வானம் தொழுங் கவுரி முக்கண்ணி சாம்பவி
மஸ்மடந்தை தாருகாசுரனை காய்ந்தவடிவேலனை நாவியீன்ற காரணி
கபாலி சிவசங்கரி உமாதேவி காதாந்த காமி
வாண்மி சிவகாமி காரணி குணதேவி
மகுடாசுர சம்வர்த்தனி பூமிதன்னி லுன்னருளைய போற்றினேனே.

7-வது சீன்.

இடம்—அரண்மனை] [காலம்—காலை.

காளிதாஸன் விருத்தம்

என்னரும் தாயும்நீ யீன்றநல் லன்னையும்நீ
ஒண்பெரும் குருவும்நீ கருத்தருவம் தெய்வமுநீயே
உனதருளாலே காளியுதவியும் பெற்றேனம்மா
மனைவியுமன்று நானுன் மகனென்ன வெண்ணுவாயே.

வசனம்

தாயே! தமது அன்பார்ந்த மகன் வந்தனம் செய்கிறேன். தாயே! சர்வமூடனுயிருந்த என்னை கடாக்ஷித்து கருணைக்கண் பாராட்டி காத்து என் கஷ்டத்தையும் போக்கி யாவரும் மகிழ சர்வவல்லமையுள்ள சக்தியின் உதவியும் பெற்று பண்டிதனுகச் செய்த உம்மை தாயென மதித்து உம்மிடம் குருப்ரசாதம்பெற்று போஜராஜன் சபையை நாடிச்செல்ல உத்திரவுதர வேண்டுமம்மா.

சிங்காரமஞ்சரி வசனம்.

நாயகா! என்ன காரியம் செய்யத்துணிந்தீர், உம்மை காளியம்மன் சன்னதிக்கு அனுப்பி பண்டிதனுகச் செய்து உம்முடன் இல்லற போகத்தை அனுபவிக்கலாமென் றிருந்த என்னை தாயென பேசி பணிகின்றீரே, இது நீதியாகுமா; ஐயோ என்னைப்போன்ற பெண்களெல்லாம் என்னைக்கண்டால் இனி என்னம் செய்யமாட்டார்கள்! நான் உமது மனைவியல்லவா? நாயகா! தமது சித்தம் மாறின காரணம் யாது, இப்படியும் பேசலாமா.

தரு

சரியோ விது (என்ற வர்ணமெட்டு.)

அதிமோகனு ஆசையானேனே அதி
மதனுமாசிலா தோகையே அதி
வெகுநாளாக விரகம்கொண்டேனே அதி
சமயமிதே சதா சாமிவசமானேன் அதி
தருணமிதுவே தையலிசேரவே அதி

வசனம்

என்னாசை பிரியா! உமது அன்பார்ந்த பார்வையால் என்னைகூட அணைந்து சுகிக்கக்கூடாதா? நான் தமக்கு மனைவியல்லவா; தாங்கள் என்னை வெறுத்தால் இதனால் தமக்கு பாபம்வந்து சூழாதா? உம்முடைய ஆசையால் எனது ஆவியே போகுமே, ஐயோ! என்னாசையெல்லாம் நிராசையாய் செய்யலாமா; என் கண்ணாளா! என்னை கண்ணேயென்று யொருதரம் பழைக்கலாகாதோ.

காளிதாஸன் தரு

உன்னாளன் விட்டு (என்ற வர்ணமெட்டு)

இனிஎன்னசெய்வேன் யானுமே—மன
மிரங்கி கடைக் கண்பாருமே—மன
மிரங்கிகடைக் கண்பாருமே இனி

உன்னாலெனதுஜன்மம் உலகில்பெற்றதே சாபல்யம்
நீருண்ணுவதேனோ வீணே
நீருண்ணுவதேனோ வீணே இனி

எதறியமூடனாயிருந்தேனே உன்னருளினால்
எனை இன்புறச் செய்ததினால்
எனை இன்புறச் செய்ததினால் இனி

காளிதாஸன வசனம்

தாயே! தாங்கள் இந்த பாபமானவார்த்தை என்னிடம் சொல்லாதீர், ஐயோ! சிவ! சிவா!! இது கூடாது, நான் தமக்கு பிள்ளையல்லவா? பிள்ளைக்கு பிள்ளை, சிடனுக்கு சிடனல்லவா? என்னை இவ்வாறு அழைக்கலாமா? ஒன்றும் தெரியாத சர்வமூடனாகிய என்னை கிருதார்த்தனாகச் செய்த உம்மை குருவென்று மதித்து உம்மை பணிந்து உம்மிடம் குருப்ரசாதம் பெற்றுக்கொண்டு போஜராஜன் சபையை நாடிச்செல்ல விருப்பங்கொண்டு இங்கு நாடிவந்தேன், ஆகையால் ஆசீர்வதித்து மங்கள வசனத்தால் போய்வர உத்திரவு கொடுங்கள், வேறுவித எண்ணம் வைக்காமல் நல்லவிதமாய் உத்திரவு கொடுங்கள் தாயே.

சிங்காரமஞ்சரி வசனம்

நாயகா! தாங்கள் ஒரேமனதாய் என்னை வெறுத்துபோகத் துணிந்து விட்டீர், ஆயினும் உமக்கு கொடுப்பதை பெற்றுக்கொண்டு போங்கள்.

காளிதாஸன் வசனம்

தாயே! என்மீது தயைகூர்ந்து எந்தவிதமான உத்திரவிட்டாலும் சரி, பெற்றுக்கொண்டுபோக தயாராய் இருக்கிறேன்.

சிங்காரமஞ்சரி விருத்தம்

புத்தியுள்ள மந்திரிசேய் சூடா மணியும்
புகன்றதொரு வாக்கியத்தை போலுந் தன்னை
இத்தலத்தி லெனக்குரிய புருட னாக
ஏற்பாடுசெய் தன்னோன் பகைமுடித் தான்
சத்திசிவ காசியினால் முத்தி பெற்றும்
சரஸிவெனை சகிக்கத்தடை செய்து பேரும்
உத்தமனே என்போன்ற மாது கையால்
உயிரிழக்க சாய்ந்திடவும் உரைசி தாமே.

வசனம்

என் நாயகா! எனக்கும், சூடாமணிக்கும் நடந்த பிரதிக்ஞைப்படி அவன் கோரிக்கையை முடித்துவிட்டான், என் கோரிக்கை முடியாமல் போனாலும் இதோ நானும் அக்கினி ப்ரவேசம் செய்யப்போகிறேன். தனக்காகாதப் பாலை தரையில் ஊற்றி கவிழ்க்க வேண்டுமென்பதுபோல் எனக்கு உதவாமல் செல்வதினால் நாம் என்னைப் போன்ற பெண்ணின் கையால் தமது உயிரானது நீங்கக் கடவது, இதுதான் என்னால் கொடுக்கக்கூடிய குருப்ரசாதம் இனி உன் இஷ்டம்போல் செய்வாய்.

காளிதாஸன் வசனம்

அம்மா! பாக்கியம் பெற்றேன், தாயிந்த வார்த்தை சொன்னது மகா ஸௌக்கிய மடைந்தேன், இனி போய்வருகிறேன்.

குறிப்பு:— சிங்காரமஞ்சரி அக்னிப்பிரவேசம் ஆகினாள், காளிதாஸன் போஜராஜன் சபையை நாடிச்சென்று ராஜன் சபையில் வித்வசிரோன்மணிகளில் ஒருவராக திலகம்போல் அமர்ந்தார். மங்களம் மங்களம்!! மங்களம்!!!

காளிதாஸ் சரித்திரம்,
முற்றிற்று.

நவரசம்பொருந்திய நன்நாவல்! (வெளிவந்தது புவனம்புகழ் புதியநாவ
உலக அனுபவங்களை விளக்கிக்காட்டும் உத்தநாவல்!!!

மாமிகளின் கொடுமை! (மூந்துங்கள்) மருமக்களின் துயரம்!!
மருமக்களின் கொண்டாட்டம்! மாமிமார்களின் திண்டாட்ட

குடும்ப விஷயத்தில் ஏற்படும் சச்சரவுகளை நிரூபிக்கக்கூடியது.

மங்களபூஷணம்

அண்டு

மாமியைவென்ற

மதிபூஷணம்

என்னும்

ஓர் துப்பறியும் செந்தமிழ் நாவல்

350-பக்கமுள்ளது விலை ரூ-1¼

தபால் செலவு வேறு.

எமது அன்புள்ள சகோதர சகோதரிகாள்! தற்காலத்தில் மாமிமார்கள் மருமக்கள்மாரின் துன்பப்படுத்தி யாதொரு சுதந்திரம் கொடாமல் இருப்பதினாலும் அதனால் நேரிடும் இடையூறுகளை கவனிக்காது போராடுகிறார்கள், அப்படி செய்யும் புத்தியில்லாதவரின் செய்கைகளையும், மருமக்கள் மாரின் பத்தி சாதுர்யத்தினால் இல்லறத்தில் சுகதுக்கம் அனுபவித்து ந பெயர் பூண்டு கொடுமையுள்ள மாமிகளை வென்று சுகப்படுவது முதலானதுக இப்புத்தகத்தில் யாவருக்கும் தெட்டென விளங்குமாறு மூதாட்டியாரின் வாக் யங்களும், பழமொழிகளும், வித்வசிகாமணிகளால் புகட்டிய அருமையான விஷய ங்களும், எழுதி காட்டியிருக்கிறது, இதிலுள்ள பலவிஷயங்களை வாசித்து நன்குண வே இப்புத்தகத்தை வெளியிட்டனம், இப்புத்தகம் ஒவ்வொரு குடும்பத்திலும் அ வசியம் இருக்கவேண்டியதே, நீங்கள் எத்தனையோ நாவல்களும் கதைகளும் வாசி திருப்பீர்கள், அதைப்போல் நாவல்தானே என்மதிக்காதீர்கள். நீங்கள் இதிலுள்ள விஷயங்களை கட்டாயம் வாசித்துப்பார்க்க வேண்டுகின்றோம்,

இப்புத்தகத்திலுள்ள கதையை கொஞ்சம் சுருக்கமாக காட்டுவோம்.

தற்பெண்ணையுடைய கொடுங்குலி என்பவள் தனது முதல் மருமகளாகிய சாந்தமி க்க மங்களபூஷணத்தை [illegible] படுத்தவும் அம்மாது ஆற்றொணாதுயரங்கொண்டு ப [illegible] வில் செல்லவும், அதின்பிறகு மதியிற் சிறந்த மதிபூஷணத்தை தனது குமாரனாகிய [illegible] குமாரத்திற்கு இரண்டாந்தாரமாக [illegible] கொண்டாள், அந்த மதிபூஷணத்தையும் தன [illegible] [illegible] பன்னகத்திலேனும் [illegible] முதல்மருமகளைப்போல் நிமிர்ச்சிருள், [illegible] மேற்கூறிய மூவரையும் பலவாறு துன்பப்படுத்தி விடு [illegible] செய்துவிட்டு மதிபூஷணத்தின் பேரில் பழியைப் [illegible] அதற்கு [illegible] காட்டி விடுகிறார்கள். அதன்பின்னர் [illegible] [illegible] குணசாகர முதலியாரும் இக்கேசுக்கு முன்னிற்க [illegible] மதிபூஷணத்தினால் மகாதந்திரமாக துப்பறிந்து [illegible] [illegible] காட்டி விடுகிறாள். அதற்குபின் மங்களபூஷணமும், மதிபூ ஷணத்தோடும் [illegible] சந்தோஷமாக வாழ்கிறார்கள். இது [illegible]

எமதுவிலாசம்:— ஸ்ரீனிவாசா அண்டு கோ.

மூரஹரி பிரஸ், 20 கெம்பர். கம்மாளர்வார் தெருமுதல் சந்து, சென்னை.

இதுவரை நாடக ரூபமா யிராத அச்சிட்ட புத்தகங்கள்

நந்தனார் சரித்திரம் — டிராமா

5-ஆக்டுகளும் 16-சீன்களு முடையது

இதில் ஒவ்வொரு சீனிலும் ஸ்டேஜியில் நடத்தும்

ஆக்டைப்போல் சென்னியாழும் திருவுருபடங்கள் சேர்த்திருக்கிறது.

இந்த நந்தனார் சரித்திரம் தி. நாராயணசாமி பிள்ளை கம்பெனி மகா-ஸ்ரீ கே. சீனிவாசப்பிள்ளை அவர்களாலும், மகா-ா-ஸ்ரீ, வி. கன்னையா கம்பெனியாரும் மாஸ்டர் எஸ். ஜி. கிட்டப்பாவினாலும் ஒவ்வொரு தேசங்களிலும் நாடகமாக நடத்தி சகல ஜனங்களையும் ஆனந்தசாகரத்தில் மூழ்கச்செய்தது, ஆதலின் மேற்படி புத்தகத்தை அச்சிலிட்டு சகலருக்கும் விளம்பரமாகும்படி அனேகர் கேட்டுக்கொண்டதின் பேரில் அச்சிட்டிருக்கிறோம்.

இதில் நந்தனார் ஒவ்வொரு இடங்களில் சிவபெருமானை தியானித்து பாடும் பாட்டுகள் பரவசமா யிருக்கும். வேதியருக்கும் புலையருக்கும் நடக்கும் தர்க்கம், நந்தனாருக்கும் வேதியருக்கும் நடக்கும் தர்க்கம் வேதாந்த சித்தாந்த இன்பமொழிகள் மனதைக் கவரச்செய்யும். நாடகம் கற்றுக்கொள்ளவும் வெகு சலபமானது.

நந்தனார் சரித்திர டிராமா புஸ்தகம் 1-க்கு விலை அணா 6.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரால் எழுதப்பட்ட

சீகாளத்தி புராணம் வசனம்.

இப்புராணத்தை படித்து புத்தகத்தை கையில் வைத்துக்கொண்டு காளத்தி க்ஷேத்திரத்திற்குப்போய் அங்குள்ள தீர்த்த மகாத்மியங்களும். அங்கு பக்தர்களுக்கு பரமசிவன் மோக்ஷமளித்த விவரம் யாவும் தத்ரூபமாய் காணலாம் இது எல்லோரின் விருப்பத்தின்படி மேற்படி முதலியாரால் எழுதப்பட்டு ஆயிரம் கணக்கான புஸ்தகங்கள் செலவாகி வருகிறது. இதை ஒருதரம் வாசித்தால் இதனால் உண்டாகும் பலன் உங்களுக்கே விளங்கும்.

சீகாளத்தி புராணவசனம், ஐதீக திருவுருப்படங்களுடன் விலை அணா-6.

மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனியிலும், ஆலந்தூர் கம்பெனியிலும், மகா-ா-ஸ்ரீ, கே. சீனிவாசப்பிள்ளை யவர்கள் கம்பெனியிலும், நடித்துவரும்

புல்புல் அயான் என்னும்

பாதுஷா - ஜமீலா சரித்திரம்.

ரெயில்வண்டி பாளத்தில்விழும் சரித்திரம் (டிராமா) விலை அணா—4.

இதில் ஆங்காங்கு தர்க்கபாட்டுகள் ரமணீயமாயிருக்கும் இதுவரை அச்சில்லாதது.

சந்திரஹாஸன் சரித்திரம்

இது ஓர் புத்திபுகட்டும் சிங்கார நாடகம்.

இதில் சந்திரஹாசன் திக்கற்றவனும் பிச்சை எடுக்கும் துக்கமான பாட்டுகளும், துஷ்டபுத்தியினால் அநேக துன்புற்று கொலையாளிகளால் விரல்வெட்டுண்டதும், குந்தலதேசம் சேர்ந்த வரை, துஷ்டபுத்தி பொறாமைக்கொண்டு விஷத்தைக் கொடுக்கச்சொல்லி எழுதியனுப்ப தத்செயலாய் விஷை என்பவள் அதை மாற்றி கலியாணம் நடப்பதும், பிறகு கோனராஜன் குமாத்தியை மணப்பதும் ராஜ்யம் பட்டம் கட்டிக்கொள்வதும் ஆங்காங்கு தர்க்கபாட்டுகள் வீரம் சோகம் முதலியன பொருந்தியிருக்கும் நாடகம் கற்றுக்கொள்பவருக்கு மிகவும் அனுகூலமானது, மேற்படி கம்பெனிகளில் இந்நாடகத்தை நடத்த பார்த்தவர்களுக்கு இந்நாடகத்தின் பெருமை விளங்கும்.

புத்தகம் 1-க்கு விலை அணா 0 4 0

எமது விலாசம்:— T. ஸ்ரீனிவாச அண்டு கோ.,
நெ. 20, கம்மாளர் தெரு முதல் சந்து சென்னை.

இதர கூந்தல் தைலங்களை வாங்கி ஏமாறுகிறீர்கள்.

ஒருதரம் இத்தைலத்தை வாங்கி தலைக்கு தடவி பரீக்ஷித்துப் பார்த்து
அதன் பிறகு உமது பந்து மித்திரர்களுக்கு சிபார்சு செய்யுங்கள்.

எமது கம்பெனியில் தயார் செய்யப்பட்டு
ஆயிரக் கணக்கான டப்பிகள் விற்பனைசெய்து
அனேக சர்டிபிகேட்டுகள் பெற்று கீர்த்தியாதிபெற்று விளங்கும்

சுகந்த பரிமள வாசனை கூந்தல்வளரும்

'மனோரஞ்சன்' தைலம்

5-பலம் எண்ணெ 2-இறமுடன் டப்பி 1-க்கு விலை ரூ-1.
ஆக மொத்தம் தபால் செலவுடன் டப்பி 1க்கு விலை ரூ. 1-6-0.

இத் தைலத்தை வாங்குவோர்க்கு அத்துடன் அழகிய தந்தசீப்பு 1, ஸ்திரீகள் தலையில் அணியக்கூடிய பட்டு ரோஜா கொண்டைப்பூ 1, ஆக இரண்டு சாமான்கள் இனாமாக கொடுக்கப்படும்.

இத்தைலத்தில் அருமையான பரிமள வாசனை திரவியங்கள் சேர்க்கப்பட்டது தலையில் தடவிக்கொண்டால் அச்சமயம் கம்மென்றிருக்கும் அதின் மணம் வீசும் கூந்தலை நீளமாக வளரச்செய்யும் தலையில் மூளையின் கொதிப்பைத் தணியச்செய்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சொல்லுன்ன பலவியாதிகளையும் நிவர்த்தி செய்யும். கண்களில் நீர்வடிதல், தலையில் புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தினவெடுத்தல், தேக அசைச்சல், சொறி சிரங்கு, சுக்கிலநஷ்டம் மனோ விபாகம், ஞாபக மறதி, இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியத்தைத் தந்து சரீரத்தை உண்டாக்கும் முகதேஜஸ் உண்டாக்கும். மிக்க உயர்ந்த தைலம். எமது கம்பெனியில் இடைவிடாத வியாபாரம் செய்துவரும் கனவான்களின் வேண்டுகோளால் அநேக திவ்ய மூலிகைகளைக்கொண்டு சாஸ்திர யுக்தமாய் தயார்செய்து நன்மையாவருக்கும் அனுப்பி சந்தோஷப் பத்திரங்கள் பெற்றுள்ளது ஒரு டப்பி தைலத்தை வாங்கிப் பார்த்தால் இதன் அருமை பெருமை விளங்கும். சூடான தேகமுடையவர் இத்தைலத்துடன் சமமாய் தேங்காய் எண்ணெ சேர்த்துக்கொள்ளவும்.

விலாசம்:—

T. ஸ்ரீனிவாசா அண்டு கோ.,

நெ 20, நம்மாழ்வார்தெரு, முதல் சந்து,
சௌகார்பேட்டை போஸ்டு, சென்னை.